

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053  கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (23-02-2024 வெள்ளிக்கிழமை) வெளியீடு +94 21 222 9722


## பெருஞ்சிவனிரவு இம்முறை மாசி 25ம் நாள்



பெருஞ்சிவனிரவு இம்முறை மாசி 25ம் நாள் (8-03-2024) வெள்ளிக்கிழமை கழுவாய் வழிபாடு அன்று நோற்கப்படும். கழுவாய் (பிரதோசம்) மற்றும் சிவனிரவு இம்முறை சேர்ந்து ஒரேநாளில்வருவது மிகவும்சிறப்பானதாகும். சிவ சிவ என்றிட சிவகதி தானே.

# ‘பெருஞ்சிவனிரவு’ இம்முறை மாசித் திங்கள் 25ம் நாள் (மார்ச் 8)

## தேய்பிறை கழுவாய் (பிரதோசம்) விரதமும் சேர்ந்து நோற்கப்படும்



அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேச்சரநாதர் திருக்கோயில் - திருகோணமலை இலங்கை

# தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி அம்மைக்கு கடவுள் மங்கல நன்னீராட்டு



சிவபூமியாம் ஈழத்திருநாட்டில் வடபால் யாழ்ப்பாண நன்னகரில் தெல்லிப்பழை துர்க்காபுரம் உழு குடைப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி, அடியவர் இடர் களைந்து அருள்மழை பொழியும் எம்பெருமாட்டி அருள்மிகு துர்க்கா தேவி அம்மைக்கு, மங்கலம் ஆண்டு (சோபகிருது) பங்குனித்திங்கள் 12ம் நாள் (25-03-2024 திங்கட் கிழமை) நிறைமதியுடன் கூடிய உத்தரம் (உத்திரம்) நாண்மீன், சித்த ஓகமும் கூடிய காலை 09.25 மணி முதல்10.33 மணி வரையுள்ள விடை வான் வேளையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நிகழ திருவருள் கூடி யுள்ளது. அவ்வேளை அடியவர்கள் அனைவரும் வருகைதந்து யாவர்க் கும் தாயாகும் எழில்பரையின் பேரருளைப்பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

கிரியைகள் 20-03-2024 புதன் கிழமை காலை 6.12மணி முதல் விநாயக வழிபாடுடன் ஆரம்பிக் கின்றது. எண்ணெய்க்காப்பு 21-03-2024 நண்பகல் 12 மணி முதல் 24.03.2024 மாலை 2 மணி வரை இடம்பெறும். கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழாவானது 25-03-2024 திங்கட்கிழமை இராச கோபுரத்தில் காலை 6.00 - 7.10 மணிக்கும், கருவறையில் 9.25 - 10.33 மணிக்கும் இடம்பெறும்.

திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழாவிற்கு அல்லது திருப்பணி வேலைகளுக்கு நன்கொடை வழங்க விரும்புபவர் கள் உரிய நன்கொடைகளை ஆலய நிதி அலுவலகத்தில் வழங்கி பற் றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளலாம் அல்லது திருக்கோயில் திருப்பணி வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம்.

(கும்பாபிஷேக திருப்பணிக் கணக்கு: இலங்கை வங்கி, சுன்னா கம் க/கு இலக்கம் -77683985)

திருச்சிற்றம்பலம்

# ஆலய பிணக்கு காரணமாக யாழில் உண்ணாவிரதம்



சுழிபுரம் மத்தி கறுத்தனாந்தோட்டம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்டுள்ளமுரண்பாட்டை அடுத்து, பொதுக்கூட்டத்தை நடத்துமாறு, வலி.மேற்கு பிரதேச செயலாளரிடம், வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சிவத்திரு வே. சச்சிதானந்தம் அவர்கள் முறையிட்டார். அதனடிப்படையில் 2023-12-07 ஆம் திகதி பிரதேச செயலாளர் தலைமையில் ஆலயத்தில் கூட்டம் ஒன்று நடைபெறும் என பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அறிவித்திருந்தனர்.

எனினும் ஆலயம் இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத காரணத்தால் இவ்விடயத்தில் தாம் தலையிட முடியாது எனக்கூறி இணக்கமன்றுக்கு செல்லுமாறு வழிப்படுத்தினார். எனினும் எதிர்த்தரப்பு இணக்கமன்றுக்கு வருகைதராத காரணத்தால் தீர்வைக் காண முடியாத நிலை ஏற்பட்டது.

இதன்காரணமாக வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சிவத்திரு வே. சச்சிதானந்தம் அவர்கள், 'எமது பொது கூட்டம் கூட்டப்பட்டு நிர்வாகம் தெரிவு செய்யபடவேண்டும்' என்ற வேண்டுகோளோடு நீராகாரம் ஏதுமின்றி கடந்த 12-02-2024 அன்று காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அவரின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, அகில இலங்கை சைவ மகா சபை மற்றும் தமிழ் சைவ பேரவையினரால் வழங்கபட்ட வாக்குறுதிக்கு அமைவாக உண்ணாவிரதம் 14-02-2024 அன்று காலை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

# புதுப்பொலிவுடன் விளங்கும் செல்லப்பா சுவாமிகள் திருமடம்

"ஒரு பொல்லாப்பும் இல்லை, எப்போவோ முடிந்த காரியம், நாம் அறியோம், முழுதும் உண்மை" என்ற அருள் வாக்குகளிற்கு உரியவரும், கடையிற் சுவாமிகளின் சீடரும், யோகர் சுவாமி களின் குருவுமான செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயம் நல்லூர் முன் வீதியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற்றும் வருகின்றது.

தற்போது நல்லூரில் அமைந்துள்ள தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயம் புனர் நிர்மானம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. இத் திருப்பணி அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனத்தின் நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டது. செல்லப்பா சுவாமிகளின்




குருபூசை தின வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சிற்றம்பலம்

# பிரசாந்த குருக்கள் அவர்களுக்கு "சிவாகமகலாநிதி" விருது வழங்கப்பட்டது

தமிழ்நாடு தஞ்சாவூர் திருபுவனம் கம்பகரேசுவரர் திருக்கோயில் கடவுள் மங் கல நன்னீராட்டு நிகழ்வில் தருமை ஆதீனத்தால் உயர் விருதாகிய "சிவாகமகலா நிதி" விருதினை பெற்று சிவத்திரு ந.பிரசாந்த குருக் கள் அவர்கள் யாழ்ப்பாண மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார்.



கடந்த 02-03-2024 அன்று நடைபெற்ற, தமிழ் நாடு தஞ்சாவூர் திருபுவனம் கம்பகரேசுவரர் திருக் கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டு நிகழ்வில், தருமை ஆதீனத்தால் உயர் விருதாகிய "சிவாகமகலாநிதி" விருது இவருக்கு வழங்கி வைக்கப்பட்டது. இவ்விரு தினை தமிழ்நாடு ஆளுநர் மதிப்பிற்குரிய ஆர். என். ரவி அவர்கள் வழங்கி வைத்தார். இலங்கை, யாழ்ப்பாணம், வட்டுகோட்டையை சேர்ந்த சிவத்திரு ந.பிரசாந்த குருக்கள் அவர்களை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்


# தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



## கோயில்களே தமிழர் நிலத்தில் தமிழின் அடையாளம்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தமிழர் பண்பாடு என்பது தனியே மொழி வழி நிற்றல் மட்டுமல்ல மாறாக மொழியுடன், வாழ்வியல், கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கருவிகள், சித்தாந்தந்தங்கள், இலக்கியங்கள் போன்று பல விடயங்களை உள்ளடக்கியது. தென்னிந்தியாவில் எவ்வாறு குலதெய்வ வழிபாடு என்ற பெருவழக்கு இருக்கிறதோ, அதேபோல் தான் ஈழத்திலும் அவர் அவர் ஊர்க் கோயில்கள், தெய்வங்கள் குலதெய்வ வழிபாடாக வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்து நிற்கிறது. அந்த குலதெய்வ வழிபாட்டு மரபின் வழி பூசைகள், திருவிழாக்கள், ஆண்டுத் திருவிழாக்கள், அன்னதானங்கள் மட்டுமல்ல ஒவ்வொரு பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறை திருக்குட நீராட்டு போன்றவையே அந்த ஊர் மக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்து வாழுகின்ற எங்கள் உறவுகள் பெருந்தொகைப் பணத்தினை அனுப்பி மிகவும் சிறப்பாக பேணிவருகின்றனர்.

கோயில்கள் என்பது வெறுமனே கட்டடங்கள் அல்ல. அது ஒரு சிறிய தன்னிறைவு கொண்ட அரசு போன்றது. கொடையாளர்கள் கோயிலுக்கு கொடுக்கும் நிதி, பலவகையில் பலருக்கும் ஏதோ வழியில் பகிர்ந்து செல்கிறது. உதாரணமாக கோயில் கட்டுமானம் என்றால் அதற்கு செலவிடும் பணத்தின் பல பகுதிகள் கட்டிடக் கலைஞர்கள், சிற்பிகள், நிறம் தீட்டுபவர்கள் என்று அவர்களின் வாழ்வியலுக்கு பக்கபலமாக நிற்கிறது. ஆகவே கோயிலுக்கு கொட்டும் நிதி என்று ஆழமாக சிந்திக்காது பொதுவெளியில் புலம்புபவர்கள் ஆழமாக சிந்திக்க முன்வரவேண்டும்.

மேலாக, தமிழர் பண்பாடு மற்றும் பண்பாட்டு எச்சங்களாக நிற்பவை தமிழர்களின் கட்டிடக்கலையே. இன்றும் சோழர் பெருமையை பேசும்போது, ஏன் தமிழர் பெருமையென கூறும்போது வாய்க்கு நூறு தடவை உச்சரிப்பது தஞ்சைப் பெருவுடையார் கோயிலே. அதுபோல் ஈழத்திலும், இன்றும் புத்தளம், சிலாபம் பகுதியில் சிங்களம் பேசும் தமிழர்கள் இருந்தாலும், அவர்களின் கோயில்கள், வழிபாட்டு முறைகளே அவர்களை இன்றும் ஆதித்தமிழர்களின் அடையாமாக மிளிரவைக்கிறது. அதுபோல் இன்று கட்டும் கோயில்கள் தான், நாளைய ஈழத்தமிழரின் அடையாளமாக எஞ்சி நிற்கும் என்ற உண்மையை அறிவின் உதவிகொண்டு ஆழமாகச் சிந்திக்கவேண்டும். மற்றும் கொடையாளர்கள் நல்லவழியில், பண்பாட்டு தேவை கருதி, அன்பளிப்பு செய்யும் பணத்தினை விபரிக்கமுன்னர், தாங்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்த சமூக மேம்பாட்டிற்கு எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்று சுயபரிசோதனை செய்து பார்க்கவேண்டும். அத்துடன் எதற்கு எடுத்தாலும் கோயில்கள், தமிழர் விழாக்கள் போன்றவற்றை மட்டுமே பேசி தங்களை சமூக சிந்தனையாளர்கள் என்று காட்டுபவர்கள் நிச்சயம் அப்படியானவர்கள் அல்ல. எழுந்தமானமாக வாயில் வந்ததை வார்த்தையாக்கி, தமிழர் பண்பாட்டினை தாங்களே அழித்தொழிக்கும் வேலையை மறைமுகமாக செய்கின்றனர்.

இதைவிடக் கோயில்களைச் சுற்றி எவ்வளவு தற்சார்பு பொருளாதார பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன என்று எண்ணிப்பார்க்கவேண்டும். கோயிலுக்கான பொருட்கள், எண்ணெய், பூ வணிகம், தேங்காய் வணிகம், பூசகர் வாழ்வாதாரம், இசைக்கலைஞர்கள் வாழ்வாதாரம் போன்று பலவகையான சமூக கட்டமைப்பு கோயிலுடன் சார்ந்து நிற்கிறது. உதாரணமாக நயினை நாகபூசனி அம்மன் திருக்கோயிலை எடுத்துப் பார்த்தால் அது ஒரு தனி அரசாங்கம் போலான நிர்வாகக் கட்டமைப்பு கொண்டது. குறிப்பாக தினமும் பல்லாயிரம் பேருக்கு சோறு போடுவது என்பது இலங்கையில் எங்குமே நடைபெறாத ஒரு செயல். அதுபோன்று சந்நிதி முருகன் திருக்கோயிலிலும் நடைபெறுகிறது. ஆகவே கோயில்கள், அதன் கட்டுமானம், திருவிழாக்கள் எல்லாம் நிச்சயம் பண்பாட்டுடன் பின்னிபிணைந்தவையே. கோயில்களிற்கு செலவு செய்பவர்கள், கோயில்களுக்கு செய்யட்டும், அதை பற்றி குறைகூறுவதை நிறுத்து, நீங்கள் மற்றத் தளங்களில் உங்கள் உதவிகளை செய்யுங்கள். ஒருவர் செய்வதை நக்கல், நையாண்டி செய்து, நீங்கள் மட்டும் சமூக சிந்தனையாளர்கள் என்று சிந்திப்பதை நிறுத்து, பலதளங்களில் பல தேவை கருதிப் பயணிப்பவர்ளை பாராட்டுங்கள். அவர்கள் சேவைகளை பகிருங்கள்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

## தபால் மூலம் தென்னாடு இதழ் வழங்கல் ஆரம்பம்

எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமானது கடந்த நான்கு வருடங்களாக சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் மாதந்தோறும் தெய்வத்தமிழ் இலவச இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றோம். இந்த இதழானது தெய்வத்தமிழ் வழிபாடு, தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள், ஈழத்து சிவத்தலங்கள், ஈழத்து சித்தர்கள், நாயன்மார்கள் என சைவத்தை பறைசாற்றும் பல ஆக்கங்களை தாங்கி வெளியிடப் பெற்று வருகின்றது. குறிப்பாக சைவத்தின் தொன்மை மற்றும் நிலைப்பாடுகளை எடுத்துரைத்து ஆவணப்படுத்தும் வகையில் ஆசிரியர் தலைப்புகளும் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு பெருந்தொகை பணச் செலவில் மாதந்தோறும் தவறாமல் பதினாறு பக்க வண்ண இதழாக, 'தென்னாடு திங்கள் இதழ்' வெளியிடப்படுவதன் நோக்கம், எமது அடுத்த தலைமுறையினரிடம் சைவத்தின் சிறப்பை எடுத்துக்கூறி, தெளிவுபடுத்தலை உண்டாக்குவதாகவே ஆகும். அத்துடன் ஆசிரியர்களுக்கும் தேவையான கருத்துக்களையும் தென்னாடு தாங்கி நிற்கிறது.

இலங்கை முழுவதும் உள்ள சைவத்தமிழ் பாடசாலைகளுக்கு தென்னாடு திங்கள் இதழை தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு இறையருள் கூடியுள்ளது. இனிவரும் காலங்களில் இயன்றளவு மாதந்தோறும் சைவத்தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளோம். இவற்றினை பாடசாலை நூலகம், ஆசிரியர் கூடம் போன்ற பொது இடங்களில் அவர்களின் வாசிப்பு தேவைக்கு பகிர்ந்து உதவுமாறு வேண்டிநிற்கின்றோம்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினபுரி மாவட்டத்தில் அறநெறி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இடம்பெற்றது



இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினூடாக இரத்தினபுரி மாவட்ட அறநெறி பாடசாலைகள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த அறநெறி ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு கடந்த மாசித் திங்கள் 6ம் நாள் (17-02-2024) அன்று காஹவத்தை ஸ்ரீகிருஷ்ணா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் உதவி பணிப்பாளரும், அறநெறி பாடசாலைகளுக்கு பொறுப்பாளருமான திருமதி. ஹேமலோஜினி அம்மணி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இச்செயலமர்வில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சேலையும் வழங்கப்பட்டது. இவ்வாறு அறநெறிக் கல்வியை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை போற்றுதலுக்குரியதாகும்.

**தகவல் : சிதம்பரம் நிரஞ்சன், அப்புத்தளை**

# செங்கோல் ஆதீனம் 103வது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமச்சாரிய சுவாமிகள் திருத்தலப் பயணம்


மாவிட்டபுரம்



நகுலேச்சரம்


நல்லை ஆதீனம்


செல்வச்சந்நிதி


சந்நிதியான் மடம்


சிவகுரு ஆதீனம்


வாரிவனேசர் - சாவகச்சேரி




திருக்கேதீச்சரம்



# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்

### கல்வி வாழ்க்கை

நாவலர் கல்வி சுற்று வரும் நாளில் தந்தையார் கத்தப்ப பிள்ளை முதுமைப் பருவத்தராயிருந்தனர். மருத்துவத் தொழிலிற் சிறந்த அவருடைய உள்ளம் தமிழ்ப் பணியில் சென்றது. முப்பெரும் பிரிவினதாக விளங்குவது நம் அருமைத் தமிழ் மொழி. வேறு எம் மொழிக்கும் இல்லாத சிறப்புக்களில் இஃதும் ஒன்று. இயல், இசை, நாடகம் எனும் பிரிவுடன் திகழ்ந்ததை யாரே அறியார். அவற்றுள், இசையும் நாடகமும் காமம் பயப்பன என்று சமணர் முதலிய சமயத்தவர் வெறுத்தனர். அதனால் அவையிரண்டும் வளர்ச்சியுறாது குன்றத் தலைப்பட்டன. நாடகமோ முழுவதும் அழிவெய்தி விட்ட தென்றே செல்லலாம். இந்த நிலையை அறிந்த தமிழறிஞர் சிலர் மனம் வருந்தினர். நாடகக் கலையால் மக்கள் எய்தும் பயனை அவர்கள் நன்கு உணர்ந்தனர். சமணர் முதலியோர் கருத்துக்கள் அறிவிற்கு ஒத்தனவல்ல என ஆராய்ந்து கண்டனர். நாடக நூல்கள் பலவும் தமிழில் இயற்றத் துணிந்தனர். அத்தகைய நன்னோக்கம் கொண்டவர்களில் ஒருவரே நம் நாவலர் பெருமான் தந்தையார். ஓய்வுக் காலம் முழுவதையும் நாடக நூல்கள் எழுதுவதிலே கழித்தார். பல நூல்கள் எழுதியுதவினார். சாந்துணையும் நாடக நூல்களை எழுதிக் குவிக்கும் கருத்துக் கொண்டனர் போலும்! ஒருநாள், ஏட்டினைக் கையிலே தாங்கி எழுத்தாணி கொண்டு ஒரு நாடகம் எழுதிக் கொண்டிருந்தார். சிந்தனை ஊற்றிலிருந்துவரும் கருத்துக்களை எழுத்தாணி வாயிலாகத்தீட்டித் தீட்டிப் படித்துக் கொண்டே இருந்தார். ஏட்டையும் எழுத்தாணியையும் பிடித்த வண்ணமே சிந்தனை தவழும் முகத்தினராய் நெடுநேரம் அமர்ந்தேவிட்டார்! பேச்சில்லை, முச்சில்லை, அச்சடித்த பதுமையே போல் அசைவில்லை. ஆம் தமிழுக்காகவே உயிரை விட்டார்! அந்தோ! நாடகம் முற்றுப்பெற வில்லையே என்ற ஏக்கந்தான் அவருக்கிருந்திருக்கும்! குடும்பத்தைப் பற்றி அவருக்கு நினைப்பேது? தொண்டின்பால் மனம் வைத்தவர்க்குப் பிறபொருளெல்லாம் துரும் பல்லவா?

தந்தையார் இறந்தபோது நாவலர்க்கு ஒன்பது ஆண்டே நிரம்பியிருந்தது. அவர் இறப்பைப்பற்றி யாவரும் வியந்து பேசுவதைக்கேள்வியுற்றார். நல்ல சாவு யாருக்கு வாய்க்குமென நாட்டினர் புகழ்ந்த வண்ணமிருந்தனர். ஆனால், நாடகத்தை முடிப்பதற்குள் நமன் கவர்ந்துவிட்டானே என்றும் இரங்கினர். இறுதியாகக் கூறிய இந்த வார்த்தைகள் நாவலர் மனத்திலே நடம் புரிந்தன! பன்முறையும் அவைகளை நினைந்தார்! நினைத்தலும் செய்தலோடொக்கும் என்பர் பெரியோர். அந்தக் கூற்றிற் கிணங்கத் தம் இளமைப் பருவமாகிய ஒன்பதாம் வயதில் தந்தை எழுதிய நாடகக் குறையை நிறைவு செய்தார். தந்தைக்கு உண்மையான கடமையைச் செய்ததாக மகிழ்ந்திருப்பரன்றோ? நாடகத்தைத் தமையன்பால் கொண்டு காட்டினார். இச்சிறிய வயதிலே இவ்வளவு இயற்கையறிவு பொருந்தியிருப்பதை அறிந்தார் தழுவி மகிழ்ந்தார், வியப்புக் கடலில் ஆழ்ந்தார்! மற்றவரும் அறிந்து மகிழ்ச்சியுள் திளைத்தனர்! அவர்கள் கண்முன்னே ஞானசம்பந்தப் பெருமானும் குமரகுருபரவடிகளும் காட்சியளிப்பதுபோல் களித்துக் கூத்தாடினர் போலும்!

இவ்வாறு தம் உடன் பிறந்தார் பாராட்டக் கண்ட நாவலர் தலை சாய்ந்து நின்றனர். தற்புகழ் விரும்பா நற்குடிப்பிறந்தவரன்றோ? தந்தையை இழந்த நாவலர் தம் வாழ்வு வளம்பெறும் பொறுப்பை அவர்தம் தமையன் முதலவாகவுர் வற்றுக்கொண்டனர். நாவலர் நுண்ணறிவைக் கண்டு தண்டமிழ்ப் புலவரிருவர்பால் தமிழ் கற்க விடுத்தனர். "தத்தையொடு கல்வி போம்" என்னும் உலகமொ பொய்யாகியது! தந்தையின் கடமையைச் செய்ய மகிழ்வுடன் போந்த தமையனாரைத் தந்தையாக எண்ணி வாழ்த்திய ருப்பரன்றோ? நாவலர் முதன் முதலாகக் கற்கச் சென்ற ஆசிரியர் சரவணமுத்துப்பிள்ளை என்பவர். அடுத்துக் கற்கச் சென்றது சேனாதிராயர் என்ற தமிழ்ப் புலவர் பாலாம். பன்னூலாய்ந்த பவணந்தி முனிவரியற்றிய நன்நூலையும், அமுதசாகரர் அருந்தமிழ் யாப்பையும் நாடோறும் சுற்று வரலானார்.


சிவ.யதோட்சயன் மங்களேச்வரன்
தரம் 11,
யாழ் மத்திய கல்லூரி

இவர்தம் கூர்த்த மதிக்கு ஆசிரியர்கள் நடத்தும் பாடம் கடலிற்கரைத்த காயம்போலிருந்தது! ஒவ்வொரு நாளும், காலையில் எழுந்து கடமையை முடித்து வழிபாடு செய்வர். பள்ளி சென்று நண்பகல் உணவு கொள்ள வருவர். உரிய காலத்தில் உணவு கிடைக்காதாயின் மீண்டும் கற்பதற்கேகுவர், நண்பகல் உணவு கொள்ள வில்லையே எனக் கருதி விரைவிலே வீடு திரும்புவாரல்லர். நன்கு பாடங் கேட்டு வழக்கம் போலவே இரவுப்பொழுதில் வந்து சேருவர். கருமமே கண்ணாயிருப்பவர் பசி நோக்காரன்றோ? அம்மட்டோ! ஆசிரியர் பாடஞ் சொல்லவியலாத பொழுதினையும் வறிதே கழிக்கமாட்டார். அங்குள்ள குடியில்லா மனையிற் சென்று அமைதியாகப் பயின்று கொண்டேயிருப்பர். ஆசிரியர் கற்பிக்கும் நீண்ட பாடல்களையும் படிக்கின்றபோதே இலக்கணப்பிழை முதலிய கண்டு சொல்லும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றிருந்தார். அக்காலத்தில் மாணவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஏடு இராது. ஏட்டினை இரவல் பெற்றே எழுதிப் படிக்கும் காலம். நாவலர் இலக்கண இலக்கியங்கள் சிலவும், தனிப்பாடல்கள் சிலவும் கற்றுக் கெள்ள முடிந்தது.



# தென்னாடு

செந்தமிழ் ஆகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



## தென்னாடு நிறைமதி அறிக்கை

(24-01-2024) – அருள்மிகு நயினை நாகபூசனி அம்மன் கடவுள் மங்கல நன்னீராட்டில் கலந்து கொள்ள, தென்னாட்டின் ஏற்பாட்டில் இலங்கை வருகை தந்திருந்த செங்கோல் ஆதீனம் 103 வது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமச்சாரிய சுவாமிகள் தென்னாடு வருகை

(25-01-2024) – தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்து ஒன்றாவது இதழ் வெளியீடு, தைத் திங்கள் 11ம் நாள் அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் செங்கோல் ஆதீனம் 103 வது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமச்சாரிய சுவாமிகள், சிவகுரு ஆதீன முதல்வர், சிற்றி ஹாட்வெயார் உரிமையாளர் சோமசுந்தரம் பிரகதீஸ்வரன், இரட்ணசிங்கம் சர்வேஸ்வரா (கல்வியல் துறை விரிவுரையாளர், யாழ். பல்கலை) அவர்கள் மற்றும் பல அடியவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். தைப்பூசம் மற்றும் நிறைமதி வழிபாடுகளும் இந்நாளில் இடம்பெற்றது.

(25-01-2024) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் தைப்பூச மற்றும் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது.

(27-01-2024) – கோப்பாய் பிரகலாதன் அவர்களின் மகளின் பிறப்பு புனிறு நீராக்கல் வழிபாடுகள் தெய்வத் தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது.

(05-02-2024) – தென்னாடு தபால் இதழ் வழங்கல் ஆரம்பம். 170 பாடசாலைகளுக்கு அனுப்பி தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

(06-02-2024) – தைத் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

(12-02-2024) – சிவனிரவு தொடர்பான கலந்துரையாடலுக்காக சைவ மாணவர் சபையின் கூட்டம் தென்னாடு மடத்தில் இடம்பெற்றது.

(16-02-2024) – குடையிற் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

(21-02-2024) – மாசித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

**தபால் மூலம் தென்னாடு இதழ்...**

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

எனவே ஏனைய செய்தி நாளிதழ் போன்று, காலம் முடிந்தவுடன் பயன்பாட்டில் இருந்து எடுத்துவிடாமல், அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் இதழ்களை ஆவணப்படுத்தி, நூலகத்தில் வைக்குமாறு தாழ்மையாக வேண்டி நிற்கின்றோம். மேலும் இவ்விதழில், சிவனிரவை முன்னிட்டு, முன்னெடுக்கப்படுகின்ற திருவாசக மனனப் போட்டி தொடர்பான விபரங்களும் குறிப் பிடப்பட்டுள்ளது அவற்றை மாணவர்களுக்கு அறியத் தரும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த மாதம் இலங்கை முழுவதுமுள்ள 170 சைவத்தமிழ் பாடசாலைகளுக்கு தென்னாடு இதழ் தபால் மூலம் அனுப்பி, தொடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்வுடன் அறியத் தருகின்றோம். உங்கள் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் தென்னாடு இதழை பெற்றுக் கொள்ள விரும்பினால் தென்னாட்டை தொடர்பு கொள்ளுங்கள்.

திருச்சிற்றம்பலம்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சிவபெருமானின் எண்குணங்கள் யாவை?**

**1) தன்வயத்தனாதல்** - சுதந்திரம் உடையவனாக இருத்தல். அதாவது பிறர் வயப்பட்டு தொழிற்படாது, அனைத்திலும் சுதந்திரம் உடையவன். இவனது ஆணைவழியே அனைத்தும்.

**2) தூய உடம்புடைமை** - உயிரின் இருப்பை எமக்கு அறிய உதவுவது உடம்பு. அதுபோல் இறைவனது இருப்பை அறிந்து கொள்வதற்கு அவனது அருள் உதவுகின்றது. எனவே உவமைகளைக் கடந்த, இப்படிப்பட்டது,இத்தகையது என்ற வர்ணனைகளுக்குள் அடங்காத அருளையே தனது உடலாகக் கொண்டிருப்பவன். அருளே அவனது திருமேனி.

**3) முடிவிலா ஆற்றல் உடையவன் / அளவிலா ஆற்றல் உடையவன்** - அறிவித்தாலன்றித் தாமே அறியமாட்டாத உயிர்களையும் அசைவித்தாலன்றி தாமே அசையமாட்டாத பிரபஞ்சங்களையும் ஏககாலத்தில் அறிவித்து, அசைவித்து அனைத்தையும் ஆளுகின்ற ஆற்றல். எச்செயலையும் எக்காலத்திலும் செய்ய வல்லமை உடைவனாக இருத்தல்.

**4) இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன்** - இறைவன் இயல்பாகவே ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசத்துக்குள் அகப்படாதவன். ஆணவம்,கன்மம்,மாயை என்னும் பாசம் இறைவனை பற்றிக்கொள்ளும் திறனற்றவை. இறைவனும் இயல்பாகவே அவற்றில் இருந்து விலகி தூய்மை யானவனாக இருப்பவன்.

இறைவனின் இவ்வியல்பினையே திருவள்ளுவ நாயனாரும்,

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. (அதிகாரம்:துறவு குறள் எண்:350)**

“பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும் உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்” என்றும்

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல. (அதிகாரம்:கடவுள் வாழ்த்து குறள் எண்:4)**

இயல்பாகவே பாசங்களிலிருந்து விடுபட்டவன் என்பதால், விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன் என்றும் திருவள்ளுவநாயனார் உணர்த்திவிடுகின்றார்.

**5) பேரருள் உடையவன்** - பயன் கருதாது அருள் வழங்கும் தன்மையுடையவன். ஆன்மாக்கள் தங்களைப் பிடித்துள்ள ஆணவம் மலத்தினால் அறிவு சுருங்கி, பேரின்பத்தை அனுபவிக்கமுடியாது துன்புறுவது கண்டு அவற்றுக்கு பாசநீக்கம் செய்து பேரின்பம் அனுபவிக்கச் செய்தல் வேண்டும் என்று எழுகின்ற பெருங்கருணையே இறைவனின் பேரருள். உயிர்களைப் பற்றியுள்ள ஆணவத்தை நீக்குதற்பொருட்டு கன்மம்,மாயையினை ஊட்டி, பிறவிகள் தந்து பக்குவப்படுத்தி ஆணவமலத்திலிருந்து ஆன்மாவினை விடுவித்து முத்தி வழங்கும் இறைவனின் ஒப்புவமையற்ற பெருங்கருணை இதுவாகும்.

**6) இயற்கை உணர்வினன்** - ஆன்மா கருவி கரணங்களின் துணையினால் அறிவிக்க அறிவது. (ஐம்புலன்களின் துணையோடு ஐம்பொறிகளின் மூலம் அறிவிக்க அறிந்து கொள்வது) ஆனால் இறைவன் தன்னியல்பால் அறிவுடையவனாக விளங்குதல். அனைத்தையும் இயல்பாகவே தானே அறியும் தன்மை உடையவன்.

**7) முற்றுணர்வினன்** - அறிவு இயற்கையாகவே விளங்குவதுடன் ஏக காலத்தில் அனைத்தையும் உணருகின்ற முற்றறிவு உடையவன். அதாவது ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொன்றாக அறியாமல் எல்லாப் பொருள்களையும் ஒரே நேரத்தில் அறிதல்.

**8) வரம்பிலா இன்பம் உடையவன் / அளவிலா ஆனந்தம் உடையன்** - பேரின்பம் உடையனாக விளங்குதல். அதாவது யாதொரு குறையும் இல்லாதவன். அவனுக்கென்று எந்தவொரு தேவையும் இல்லை. சுயமான விருப்பு வெறுப்பு என்று ஒன்றில்லை. ஆதலால் குறையும் இல்லை. எனவே இதுதான் அவனது இன்பத்தின் வரம்பு என்று வரையறுக்கமுடியாத எல்லையில்லா இன்பமுடையவன்.

தன்வயத்தனாதல், தூய உடம்புடைமை,முடிவிலா ஆற்றல் உடைமை, இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய தன்மை ஆகிய நான்கும் இறைவனின் சத்து தன்மைக்குள் அடங்கும். முற்றுணர்வு உடைமை, பேரருள் உடைமை, இயற்கை உணர்வுடமை ஆகிய மூன்றும் சித்து தன்மைக்குள் அடங்கும். வரம்பிலா இன்பம் உடைமை ஆனந்தத்தன்மைக்குள் அடங்கும்.

திருவள்ளுவநாயனாரும்,

**கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை - (அதிகாரம்:கடவுள் வாழ்த்து குறள் எண்:9)**

“கேட்காத செவி பார்க்காத கண் முதலியனபோல் எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்” என்று கூறி, கடவுளுக்கு எண்குணங்கள் உண்டென்று கூறுகின்றார்.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# தமிழிசையால் இணைவோம்!

இசை உலகப் பொதுமையானது. அது எந்த இதயத்துக்குள்ளும் துழைந்து தன்னைப் பரப்பி தன்பால் அந்த உயிரை இலயிக்கச் செய்யும் ஆற்றல் பெற்றது. அவ்விசையை நுகர மானிடர்கள் விரும்புவர். ஐந்தறிவு உயிரினங்களும் இசைக்கு இசையும் தன்மையைப் பெற்றவை. ஆதிசிவன் கையில் உடுக்கையும், கண்ணன் கையில் குழலும் இருப்பதை வைத்து தமிழிசையின் தொன்மையையும், அவ் இசையை இந்த மண்ணின் மனிதர்கள் எவ்வளவு தூரம் போற்றி வணங்கினர் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இன்று இசை இலத்திரனியலிலும், சினிமாவிலும் தன்னை நிலைப்படுத்தியுள்ளது. பொதுவாகவே இசை என்கில் அது சினிமா பாடல்களில் தான் உள்ளது எனவும், சினிமாவில் இசையமைக்கும் இசையமைப்பாளர்கள், பாடகர்களின் வீட்டுச் சொத்து எனவும் எண்ணும் அளவுக்கு நிலமை உள்ளது. இதனால் தான் தென்னிந்திய கலைஞர்களின் இசை நிகழ்வுக்கு எமது இளைஞர்கள் மிக்க ஆர்வப்படுவதையும், அதனால் குழப்பங்கள் நிகழ்வதையும் அண்மைக்காலத்தில் நாம் காண்கின்றோம்.

எனினும் தமிழிசை பற்றிய தொன்மையும் அது கூத்துக் கலையாகவும், கிராமிய கலைகளாகவும், மனதை உருக்கும் தேவாரப் பாடல்களில் பண்ணிசையாகவும் மக்கள் மத்தியில் கலந்திருந்தமை பற்றி நாம் சிந்திப்பது இல்லை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின், நுண்கலைப் பீடத்தில், பண்ணிசைக்கு எனத் தனித்துறை உள்ள போதும், அதில் இணைந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சொற்பமே! பல்கலைக்கழக மாணவர்கள் சமுக வலைத் தளங்களில், சினிமாப் பாடல்களை ஒலி அசைவு செய்தும், அவற்றுக்கு நடித்தும் தம் காலத்தை இன்று அவமே போக்குவதை தினமும் காண்கிறேன். எம் மண்ணின் தனித்துவ இசைமீது நாட்டம் இன்றி இருப்பதற்கு காரணம், சினிமா இசைத் துறையின் சனரஞ்சகத் தன்மையே ஆகும். இன்று இசை ‘கானா பாடல்கள்’ மற்றும் ‘சொல்லிசை’ போன்ற புதிய வடிவங்களைப் பெற்றுள்ளதைப் போன்று, எமது தனித்துவம் மிக்க தமிழிசையும் புதிய பரிநாமம் பெற வேண்டிய சூழல் இன்று உருவாகியுள்ளது.

இவ்வாறே, தமிழிசையையும், தமிழ் இசைக்கலை வடிவங்களான கூத்து, கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம். போன்ற கிராமிய பண்பாட்டியல் கோலங்களையும் நவீனமயப்படுத்தும் முயற்சிகள் வேண்டும். ஆங்காங்கே இத்தகு முயற்சிகள் நடைபெறினும் அவை இன்னும் எழுச்சியோடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

‘யாழ் நூல்’ தந்த சுவாமி விபுலானந்தர் போன்ற பல அறிஞர்களையும், தவில் மேதை தட்சிணாமூர்த்தி போன்ற ஆற்றலாளர்களையும் தந்த இந்த மண்ணின் இளைய தலைமுறை, இன்னொரு வகுதியினரிடம் இசையை பெறத் தம் சுயத்தை இழக்க கூடாது.

தேவாரம், திருவாசகம் முதலியவற்றையும், பெரியபுராணம், கந்த புராணம் முதலியவற்றையும் ஆலயங்கள் தோறும் முற்றோதல் செய்தும், அவற்றை பலர் இருந்து கேட்டும் இசை இந்த மண்ணில் கடத்தப்பட்டது. இன்று இந்த நடைமுறை. நலிவடைந்து போனாலும், அதன் அடையாளங்களும், ஓதுவார்களும் எம்மத்தியில் உள்ளனர். இவ்வண்ணம் எம் தனித்துவமான தமிழிசை ஏழாயிரம் ஆண்டுகள் பழமையானது என்கின்ற கருத்தும் உண்டு, அகத்தியம், தொல்காப்பியம் போன்ற பண்டைய தமிழ் நூல்களும், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்ற சங்ககால நூல்களும் தமிழிசையின் பழைமைக்கு சான்று சொல்வன.

பண்டைய தமிழ் மன்னர்கள் அமைத்த கோயில்களில் இசைப் படிகளும், இசைத் தூண்களும், இசைக் கருவிகளின் சிற்பங்களும் எமக்கு பல செய்திகளைச் சொல்லும்! பாணர், பொருணர், பாடினியர், கூத்தர், விறலியர் போன்ற பெயர்களுக்கு சொந்தக்காரர்களல்லவா நாம்? எனவே சினிமா இசையின் பின் சிறிதும் சிந்தியாது செல்லும் நாம், நம் பழந்தமிழர் இசையை மீட்டு அதன் மூலம் தமிழ் இதயங்களையும், பிற நாட்டார் இதயங்களையும் வெல்வோமாக!

**“குரலே துத்தம் கைக்கிளை உழையே**
**இளியே விளரி தாரம் என்றிவை**
**எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே”** – சிலப்பதிகாரம்

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# பதினொராந்திருமுறையின் பாதை எது?

சைவசமயத்தின் மாட்சிமையைப் பறைசாற்றி, சிவப்பரம்பொருளின் அளவற்ற பேரருளை செழுந்தமிழ் கவிகளினூடாகத் தெரிவிப்பவையே பன்னிரு திருமுறைகள் ஆகும். அப்பன்னிரு திருமுறைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது பதினொராந்திருமுறை ஆகும். இத்திருமுறையிலே தான் சைவசமயத்தின் மிகப்பழைய நூல்கள் அடங்கியுள்ளன. பதினொராம் திருமுறை பலமிழக்கின் சைவத்திருமுறையும் பழைமையிழக்கும்.

சிவபெருமானே செய்தருளிய திருமுகப்பாசுரத்தை ஆரம்ப நூலாகக் கொண்டுள்ளது பதினொராந்திருமுறை. முருகப்பெருமானை பாட்டு டைத்தலைவனாகக் கொண்ட திருமுருகாற்றுப்படையும், விநாயகப்பெருமானை பாட்டுடைத்தலைவனாகக் கொண்ட மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையும் இத்திருமுறையிலேயே அடங்கியுள்ளன.

சேக்கிழாரின் பெரியபுராண உருவாக்கத்திற்கு பேருதவி புரிந்த நம்பி யாண்டார் நம்பி பாடல்களையும் இத்திருமுறையே உள்ளடக்கியுள்ளது. நம்பியாண்டார் நம்பியின் பாடல்களே பெரியபுராணத்தை வளர்த்தன. நம்பியாரின் பாடல்களில்லாமல் விடின் பெரியபுராணத்தின் உருவாக்கம் கேள்விக்குறியே.

திருஞானசம்பந்தருக்கும், நாவுக்கரசருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து, விருத்தப்பா எனும் ஒப்பற்ற பாவினத்தை தமிழுக்கு அறிமுகம் செய்து, தமிழ்ப்பத்தியிலக்கியத்தின் தோற்றுவாயாகத் திகழும் காரைக்காலம்மையார் பாடல்களையும் இத்திருமுறையே உள்ளடக்கியுள்ளது. காரைக்காலம்மை பாடல்களில்லையெனின் விருத்தப்பாவில்லை, பத்தியிலக்கிய உருவாக்கம் இல்லை, பன்னிரு திருமுறையே இல்லையெனலாம்.

உலாமாலை வகை இலக்கியம், ஏகாதசமாலை வகை இலக்கியம், திருக்கலம்பக வகை இலக்கியம், திருத்தொகை வகை இலக்கியம், திருவிருத்த வகை இலக்கியம், திருவெண்பா வகை இலக்கியம், தேவபாணி வகை இலக்கியம், கோபப்பிரசாத வகை இலக்கியம், கார் எட்டு வகை இலக்கியம், போற்றிக்கலிவெண்பா வகை இலக்கியம், ஆற்றுப்படை வகை இலக்கியம், திருமற வகை இலக்கியம், நான்மணி மாலை வகை இலக்கியம், ஒருபா ஒருபது வகை இலக்கியம், சீட்டுக்கவி வகை இலக்கியம், பதிக வகை இலக்கியம், இரட்டை மணிமாலை வகை இலக்கியம், அந்தாதி வகை இலக்கியம், மும்மணிக்கோவை வகை இலக்கியம், உலா வகை இலக்கியம்,எழுபது வகை இலக்கியம், எழுகூற்றிருக்கை வகை இலக்கியம் முதலிய 22 சிற்றிலக்கிய வடிவங்களைக்கொண்டது பதினொராந்திருமுறை இத்திருமுறையில்லை யெனில் சைவச்சிற்றிலக்கியங்கள் இல்லாது போயிருக்கும்.

சேரமான் பெருமாள், பட்டினத்துப்பிள்ளையரின் பாடல்கள் என்பவற்றையும் இத்திருமுறை உள்ளடக்கியுள்ளமை இதன் பெருமைக்குச் சான்றாகும். எவ்வளவு சிறப்புடையதாக இருப்பினும் அதன் பெருமை போற்றப்பட வில்லையோ என்ற கவலை சைவர்களைச்சூழாமலில்லை.

திருமுறையென்ற உடனேயே பலரும் நினைவிற் கொள்வது தேவா ரத்தையும், திருவாசகத்தையும், பெரியபுராணத்தையும் மாத்திரமே. திருமுறையை ஓதும் போதோ, பஞ்ச புராணம் பாடும் போதோ பதினொராம் திருமுறை விலக்கப்படுவது சைவர்களின் தவமின்மையே.

சைவத்தையும் சைவத்திருமுறைகளையும் போற்றிப்பேணவேண்டு மெனில் பன்னிரு திருமுறையை ஐந்தாகச் சுருக்காமல், பதினொ ராந்திருமுறையோடு சேர்த்துப்பாடுவதே வழிசமைக்கும். குறிப்பாக எவற்றுக்கு முக்கியம் கொடுக்காவிடினும், காரைக்காலம்மையார் பாடல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். அதனைச் சைவர்கள் உறுதி செய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்**

# சைவ ஆலயப் பூசைகள் மற்றும் ஓமங்களும் தமிழிற் செய்யலாம்

## மரபுவழி ஆதரத்துடனான விளக்கம்

**மன்னுமாமலை மகேந்திரமதனில்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்** - திருவாசகம்

தமிழே உலகின் மூத்தமொழி, அதில் வழிபாட்டு கூறுகள் நிறையவே உண்டு. காலஓட்டத்தில் அழிந்திருக்கலாம், அவற்றில் சிலவே தற்போது உள்ளன என்று திடமாக சிந்தித்து செந்தமிழ் ஆகம முறையில் வழிபாடுகள், கிரிகைகள் போன்றவற்றை முன்னெடுப்பதே தென்னாடு சிவமடத்தின் தலையாய நோக்கமாகும். தமிழ் வழிபாட்டிற்கு மறுப்பாக, ஆழம் அறியாமல் பொதுவெளியில் வெளியிடப்படும் கட்டுரைகளுக்கு மரபு வழி நின்றே மறுப்புகளை தரவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

### சைவாலயப்பூசையும் ஓமங்களும் தமிழிற் கூடாதா?
**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

गारुडं भूततन्त्रं च भैवरं वामतन्त्रकम् ॥
कापालं पाञ्चरात्रं च लाकुलं कुलशास्त्रकम् ।
तन्त्रं पाशुपतं चान्यत् पुराणं धर्मशास्त्रकम् ॥

इतहिासं षडङ्गं च ऋग्यजुस्साम संज्ञकम् ।
अथर्वणं तथा बौद्धं आर्हतं मतमेव च ॥
ऊर्ध्वस्रोतोऽक्षपाच्छास्त्रादपरं तदनुक्रमात्
। - பூர்வ காமிக ஆகமம்

**பொருள்:** - காருடம், பூததந்திரம், பைவரம், வாமம், காபாலம், பாஞ்சராத்திரம், லகுளம், கௌலம், பாசுபதம் சாத்திரங்கள், புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், இதிஹாசங்கள், ஆறாங்கம், இருக்கு வேதம், யஜூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், பௌத்த நூல்கள், ஆர்ஹத நூல்கள் (சமண) - ஆகியவை அபரம், ஊர்த்துவ சாத்திரங்களான ஆகமங்கள் என்பவை பரம்

காமிக ஆகமம் **"வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சமண நூல்கள், பௌத்த நூல்கள் யாவும் அபரம்"** என்றும் **"சிவாகமமே பரம்"** என்றும் வலியுறுத்துகின்றது. சிவாகமத்தின் ஞானகாண்டம் பன்னிருதிருமுறையாகும். எனவே, வேதங்களிலும் உயர்ந்தது பன்னிருதிருமுறை என்பதைக் கம்பவாரிதியார் தெளிந்தால் நன்று. மேலும், **"வேதமும் ஆகமமும் சேர்த்துச்செய்யும் பூசை மத்திமம் என்றும், வேதம் மட்டும் வைத்துச்செய்யும் பூசை அதமம் என்றும், சிவாகமம் மட்டும் பயன்படுத்திச் செய்யும் பூசையே உத்தமம்"** என்றும் காமிகாகமம் வலியுறுத்துகின்றது.

उत्तमं मध्यमं नीचं त्रविधिं स्यान्मदर्चनम्
॥ ௭௫
केवलैश्शुद्धशैवोत्थैः मन्त्रैः उत्तमं उच्यते ।
मध्यमं शैववेदोत्थैः अधमं वैदिकैर्मतम् ॥௭௬

**(உத்தமம் மத்யமம் நீசம் த்ரிவிதம் ஸ்யான்ம தர்சனம் கேவலைச்சுத்தசைவோத்தை: மந்த்ரை: உத்தமம் உச்யதே மத்யமம் சைவவேதோத்தை: அதமம் வைதிகைர்மதம்)**

இதன் பொருள் - எனது வழிபாடு மேலானது, இடைபட்டது, நீசமானது என்று மூன்று வகைப்படும். சுத்த சைவ ஆகமத்தில் வரும் மந்திரங்களை மட்டும் கொண்டு செய்யப்படுவது மேலானது. சைவ மந்தரங்களையும் வேத மந்திரங்களையும் இணைத்து செய்யப்படுவது இடைப்பட்டது, வைதீக மந்திரங்களை மட்டும் கொண்டு செய்யப்படுவது கீழானது.

காமிக ஆகமத்திலே **"வேதம் முதலிய நூல்களெல்லாம் இரௌத்திரங்களாம் சிவாகமமே (சித்தாந்தமே) சௌமியமாம்"** என்று கூறப்பட்டிருப்பதனாலும் இவ்வுண்மை மேலும் புலப்படும். எனவே, வடமொழி வேதத்தைக் கைவிட்டுச் செய்யும் பூசைதான் காமிகாகமப்படி உத்தமபூசையாகும். காமிகாகமம் சில வடமொழி வேதத் தோத்திரங்களைப் படிக்கலாம் என்று விதித்துள்ளதென்னேயெனின், சிவாலயப்பூசையை மத்திமபூசையாகச் செய்வதாக இருந்தால் என்னென்ன வடமொழிவேதத் தோத்திரங்கள் படிக்கலாம் என்று வரையறுக்கவேயென்க. எனினும் இவ்வாகம விதிகளைக் கைக்கொள்ளாது இக்காலத்தில் எமது சைவாலயங்களில் சிவபரத்துவ விரோதமாகப் பல்வேறு வேதத்துதிகள் ஓதப்பட்டுவருதல் கண்கூடு.

கற்பூர ஆரத்தியின்போது பாடப்பட்டுவரும் வேதத்தோத்திரம் **"ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய சாஹினே நமோ வயம் வைச்ரவணாய குர்மஹே ஸமே காமான் காம காமாய மஹ்யம் கமேச்வரோ வைச்ரவணோ ததாது குபேராய வைச்ரவணாய மஹாராஜாய நம:"** என்பதாகும். இதனுடைய பொருள் யாதெனின்,

**"தலைவர்களுக்கெல்லாம் தலைவனும் பெரும் வெற்றிகளைக் கொடுப்பவனுமாகிய குபேரனை நாங்கள் வணங்குகின்றோம், விருப்பங்களை நிறைவேற்றுபவனும் செல்வத்தின் தலைவனுமான குபேரனுக்கு, மன்னாதி மன்னனுக்கு வணக்கங்கள்"** என்பதாகும். முருகப்பெருமானுக்கு அலங்காரங்கள் செய்து கொடி குடை ஆலவட்டம் முதலிய வழிபாடுகளெல்லாம் செய்து அடுக்குத்தீபம் கும்பதீபம் என்றெல்லாம் பல்வேறு தீபங்கள் காட்டி, முருகப்பெருமானே பரம்பொருள் என்று வணங்கிக் கொண்டிருக்கையில், பஞ்ச கற்பூர தீபம் (பஞ்சாராத்தி) காட்டும்போது குபேரனே இராஜாதிராஜன் என்றும் அவனே செல்வங்களைத் தருவான் என்றும் ஓதினால், எங்ஙனம் முருகப்பெருமானின் அருள் கிடைக்கும்? நாட்டின் சனாதிபதிக்கு அத்தனை மரியாதைகளும் செய்துவிட்டு அவனுடைய வேலைக்காரனே இராஜாதிராஜன் என்று சனாதிபதிக்கு முன்னால் அவனுடைய வேலைக்காரனை பல்லக்கில் சுமந்தால் எப்படியிருக்கும்? இன்று வேதத்தோத்திரப் பிரயோகம் என்னும் பெயரில் நடப்பதெல்லாம் இக்கூத்தேயாகும். இவைபற்றிக் கம்பவாரிதியாருக்கு அக்கறை ஒருபோதும் எழப்போவதில்லை. வேதத்தில் கூறப்பட்டுள்ள தெய்வ நாமங்கள் எல்லாம் சிவநாமங்களே என்ற கருத்துடையார், இங்கு குபேரன் என்பதும் சிவனையே குறிக்கும் என்று சமாதானஞ் சொல்வர். எனினும், **"இருக்குவேதத்திலும் இருக்குவேதசிரசிலும் யசுர்வேதத்திலும் யசுர்வேத சிரசிலும் சாமவேதத்திலும் சாமவேத சிரசிலும் ஓராவிடத்தில் அதர்வவேதத்திலும் அதர்வவேத சிரசிலும் லௌகிக நூற்பொருளும் வைதிக நூற்பொருளும் அத்தியான்மக நூற்பொருளும் அதிமார்க்க நூற்பொருளும் யதோசிதமாக எவ்வாற்றானும் சொல்லப்பட்டன. அதர்வசிரசிலே மாந்திர நூற்பொருள் விசேஷித்துச் சொல்லப்பட்டது"** என்று நாவலர்பெருமான் பெரியபுராண சூசனத்தில் விளக்கியுள்ளதினாலும் **"வேதங்கள் சிலவிடத்துச் சிவசாத்திரப் பொருளைச் சிரசிலே தாங்கி இருத்தலால்"** என்று நாவலர்பெருமான் பெரியபுராண சூசனத்தில் கூறியுள்ள பாங்கினால், பலவிடத்து சிவசாத்திரப் பொருளைத் தாங்கி நிற்காமை பெறப்பட்டு நிற்பதினாலும்

அப்பர்சுவாமிகள், பதினொராம் திருமுறையில் கோபப் பிரசாதம் என்னும் திருப்பாடலினை அருளிய நக்கீரதேவ நாயனார், **"கொச்சைத் தேவரைத் தேவரென்று எண்ணிப் பிச்சரைப் போலவோர் ஆரியப் புத்தகப் பேய் கொண்டு புலம்புற்று"** என்று கடிந்துகொள்வதாலும், **"சிவன் எனும் ஓசை அல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மை யுளதே"** என்று அருளிப்பாடியுள்ளதினாலும், இத்தோத்திரம் பூசையில் புகுந்த வடமொழி அபிமான சிவபரத்து வக்கேடேயாகும்.

**"நமசிவாய"** முதலிய மந்திரங்களெல்லாம் வேதமந்திரம் என்று கம்பவாரிதியார் போன்றோர் சிந்திக்கக்கூடும். உத்திர காமிகாகமம் மிகத்தெளிவாக,


வைத்தியக் கலாநிதி
கி.பிரதாபன்
தலைவர் - இலங்கை
சைவநெறிக் கழகம்

वैदकिान्न बहर्भूतं शैवं शैवात्तदप्यथ ॥ (சைவம் வைதீகத்திலிருந்து வெளிப்படவில்லை. சைவத்திலிருந்தே சைவம் உண்டானது) என்றும்,

शैवं तु मूलभूतं स्यात् चतुर्वेदास्तमुद्भवाः। (சைவம் வேர் பொருள். இதிலிருந்தே நான்கு வேதங்கள் தோன்றின) என்றும் மிகத்தெளிவாகக் கூறுகின்றது.

வாயவ்வியசங்கிதையில் **"பிறநூல்களில் கூறப்பட்டதெல்லாம் சிவாகமத்தில் இருக்கின்றது, சிவாகமத்திற் காணப்படாதது பிறிதோர் இடத்திலும் இல்லை"** என்று கூறப்பட்டுள்ளதினை நாவலர் பெருமான் பெரியபுராண சூசனத்தில் எடுத்துக் காட்டியுள்ளதும் இவ்விடத்தில் கொள்ளத்தக்கது. எனவே, சைவாகம மந்திரங்கள் வேதத்தில் உலகார் பொருட்டும் உண்டு. ஆனால், சைவாகமங்கள் சத்திநிதிபாதராகிய சைவருக்கேயாகும்.

'குயங்கொண்டான்' என்பவன் தமிழைப் பழித்து ஆரிய மொழியைப் போற்றிப் புகழ்ந்ததைக் கண்டு நக்கீரர் சினங்கொண்டார். உடனே பின்வருமாறு அருளிப்பாடினார்.

**ஆரியம் நன்று தமிழ் தீ தெனவுரைத்த**
**காரியத்தாற் காலக் கோட் பட்டானைச் -சீரிய**
**வந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்**
**செந்தமிழே தீர்க்க சுவாகா**

அந்தக் குயங்கொண்டான் உடனே செத்து வீழ்ந்தான். சினம் தணிந்த நக்கீரர் ஏனையோர் இறைஞ்சியதனால் கருணைகொண்டு,

**முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி**
**பரண கபிலரும் வாழி - யரணிய**
**ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட**
**ஆனந்தஞ் சேர்க்க சுவாகா**


என்று அருளிச்செய்து உயிர்ப்பித்தார். இப்பாடல்களை தொல்காப்பிய உரையில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பயன்படுத்தி மந்திரம் என்பதற்குரிய விளக்கத்தை அளித்துள்ளனர். **"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப"** என்ற தொல்காப்பியம் பொருளதிகாரச் செய்யுளுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியார், மேற்படி பாடல்களை உதாரணம்காட்டி, **"தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தோர் பொருட்டு நக்கீரன் ஒருவன் வாழவுஞ் சாவவும் பாடி இன்னவாறாகவெனச் சவித்தற்பொருட்டாய் வந்த மந்திரம் பாட்டாய் வருதலின்"** என்று விளக்கியிருப்பதனையேனும் கம்பவாரிதியார் படித்துணருதல் நன்று. மந்திரம் பாட்டாகவும் விளங்கும் என்பது இதனாற் பெறப்படும். திருக்கதவைத் திறக்கப் பாடியமை, திருக்கதவை மூடப்பாடியமை, பாம்பு தீட்டி இறந்த பாலகனை உயிர்ப்பிக்கப் பாடியமை, பொன்பெறப் பாடியமை, படிக்காசு பெறப்பாடியமை, கண் பெறப் பாடியமை என்றெல்லாம் நாயன்மார் செய்த எண்ணிறந்த அற்புதங்களால் திருமுறைகள் மந்திரங்களென்று திடமாய்த் தெளிவுறும்.

**எல்லாம் திருவருட் சம்மதம்**

கட்டுரைக் கருத்துக்கள் எழுத்தாளருக்குரியது.

**சைவ ஆலயப் பூசைகள் தொடரும்.**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**குரு லிங்க சங்கம வழிபாடு என்பது என்ன?**

சிவனே குருவாக வந்து அல்லது குருமூலமாக ஆன்மாவுக்கு உபதேசம் கொடுத்து முத்தி யளிப்பன் என்பது சைவக்கொள்கை. இதனால், குருவைச் சிவமாகக் கொண்டு வழிபடுதல் வேண்டும். இது இறை உயிர் உறவை வளர்த்து ஆன்மீக வளர்ச்சியடையத் துணை செய்யும்.

சிவன் சதாசிவ மூர்த்தியாக நின்று அருளல் தொழில் செய்கிறான். சிவலிங்கம் சதாசிவ மூர்த்தி. ஆகவே செய்து உயிர்கள் வீடு பேற்றை அடையத் துணைச் சிவலிங்கத்தை நாம் வழிபடுதல் வேண்டும். சங்கமம் என்பது கலந்து நிற்றல் என்று பொருள் தருவது. சிவனருளில் கலந்து நிற்பவர்கள் சிவனடியார்கள், சைவ நாயன்மார்கள். இத்தகையவர்கள் சிவனுக்கு ஆட்பட்டவர்கள். சங்கமம் என்பது இவர்களைக் குறிக்கும். இவர்களின் செயல் சிவன் செயலாக இருக்கும். அவர்கள் சிந்தனையில் சிவனே நிறைந்திருப்பதால் இவர்களையும் வழிபடுதல் வேண்டும்.

எனவே, குரு வழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு ஆகிய மூன்றும் எமக்கும் இறைவனுக்கும் உள்ளன உறவை வளர்த்து வீடு பேற்றுக்கு வழி வகுக்கும்.

**பந்தமும் வீடும்**

**பந்தம், வீடு என்பவற்றின் பொருள் என்ன?**

பந்தம் என்றால் கட்டு என்று பொருள். பாசம் என்பதும் இதே பொருளை உடையது. ஆன் மாக்கள் மலங்களால் கட்டுப்பட்ட நிலை பந்தநிலை.

வீடு என்பது விடுதலை அல்லது விடுதலை பெற்ற நிலை. முத்தி என்பதும் இதே பொருளை உடையது. பாசத்திலிருந்து விடுதலை பெற்ற நிலை முத்தி எனப்படும்.

**உயிர்கள் மலத்தினால் கட்டுண்டது எப்பொழுது? இக்கட்டு எதனால் நேர்ந்தது?**

உயிர்கள் அனாதியாகவே ஆணவத்தினால் கட்டுண்டு உள்ளன. ஆதி என்றால் தொடக்கம் என்பது பொருள். அனாதி தொடக்கமற்றது. செம்பிற் களிம்பு போல், நெல்லில் உமி போல் உயிருடன் இயல்பாகவே சேர்ந்திருப்பது ஆண வம். இதனால் ஆணவம் சகச மலம் எனப்படும். சகசமலம் என்றால் இயல்பாகச் சேர்ந்துள்ள மலம் என்பது பொருள்.

**கன்மமும் மாயையும் உயிரைக் கட்டுப்படுத்துவது இல்லையா?**

ஆணவ மல நீக்கத்திற்காக உயிருக்கு இறை வனால் ஊட்டப்பட்டவை கன்மமும் மாயையும். இவை ஆணவத்துடன் சேர்ந்து தொழிற்படு வதால், ஆணவக் கட்டு நீங்கும் வரை, அவையும் உயிருக்குக் கட்டாக உள்ளன. இதனால் இவற் றையும் மலங்கள் என்பர்.

ஆணவம்தான் உயிரின் மூலமலமாக உள்ளது. உயிர் பிறவிகள் எடுக்க முன் ஆணவமலத் தோடுதான் இருந்தது. உயிரின் இந்த நிலை கேவலம் எனப்படும்.

**கேவலத்தில் உயிர் எவ்வாறு இருந்தது?**

பிறவிகள் எடுக்க முன் இருந்த கேவல நிலை யில் ஆணவம் இருள்போல் உயிரை மறைத்தி ருந்தது. உயிரின் அறிவு, செயல், இச்சை ஆகிய ஆற்றல்கள் வெளிப்பட முடியாமல் இருந்த நிலை இது. 'காரிருளில் கண்ணிலாக் குழவிபோல்' உயிர் இந்நிலையில் இருந்ததாகக் கூறித் தாயுமானவர் விளக்குவார்.

**இந்தக் கேவல நிலையிலிருந்து உயிர்விடுபட்டது எவ்வாறு?**

தனது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியா மல், உணராமல் உயிர் இந்நிலையில் இருந்தது. அதன் தன்னையும் அறியாமல், தனக்கு மேலுள்ள பரம்பொருளையும் பரிதாபமான இந்நிலையை மாற்றி உயிரை உய்விக்கக் கருணையே வடிவான இறைவன் உளம் கொண்டு, ஒரு; நுண்ணு டம்பைப் படைத்து உயிருக்கு அளிக்கிறான். உயிர் பெறும் முதற்பிறவி (முதலுற்பவம்) இதுவாகிறது. உயிர் பெற்ற இந்த நுண்ணுடம்பு (சூக்கும சரீரம்) புரியட்டகாயம் எனப்படும். மனம், புத்தி, அகங்காரம் எனும் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்துமாகிய எட்டுத் தத்து வங்களால் ஆனது புரியட்டகாயம். இறைவன் இதனை மாயையிலிருந்து படைத்தளிக்கிறான். எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையாய்க் கொடுக்கப்பட்டது இந்த நுண்ணுடம்பு.

இதனைப் பெற்றதும் உயிர் இயங்கத் தொடங்குகிறது. அதன் அறிவு, இச்சை, செயல் ஆகிய ஆற்றல்கள் வெளிப்படுகின்றன. இச்சை யின் வெளிப்பாட்டுக்கமைய விருப்பு வெறுப்புத் தோன்றி, இவை உயிரின் முதல் வினைக்குக் காரணமாகின்றன. இந்த வினைக்கேற்ப மாயை யிலிருந்து படைத்து அளிக்கப்படுகிறது. உயிரின் உயிருக்குப் பரு உடம்பு (தூல சரீரம்) இறைவ னால் கேவல நிலை மாறுகிறது.

**உயிர் எடுக்கும் இந்த முதற்பிறவி குறித்து பிற இந்தியத் தத்துவங்கள் கூறுவதென்ன?**

பொதுவாக உயிரின் மறு பிறவி (புனருற்பவம்) குறித்தே எல்லா இந்திய தத்துவங்களும் கூறுகின்றன.சைவ சித்தாந்தம் ஒன்றுதான் முதற்பிறவி பற்றிக் கூறுகிறது.

**கேவல நிலை மாறியபின் உயிரின் நிலை எத் தகையது?**

பரு உடம்புடன் புதிய பிறவி எடுத்த உயிர் செயல் புரிகிறது. அதன் செயல்களின் மூலம் முன் செய்த வினைப்பயன்கள் அனுபவத்திற்கு வந்து தீர்ந்து போகின்றன. ஆயினும் அதன் வினையினால் (செயல் களினால்) புதிய வினைப் பலன்கள் உண்டாக, அவற்றை அனுபவிக்க வேண்டியுள்ளது. இவற்றை அனுபவிப்பதற்கு ஏற்ற உடம்புடன் இன்னொரு பிறவியை இறைவன் கொடுக்கிறான். இங்ஙனம் வினையும் பிறவியும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்கின்றன. உயிரின் இந்த நிலை சகலம் எனப்படுகிறது. பிறவிகள் தோறும் உயிர் எடுக்கும் உடம்பு சகல தத்துவங்களுடன் தொடர்புடையது. ஆதலின் சகலம் எனப்படுகிறது. இந்த நிலை மாறியபின் உயிர் பெறும் நிலை சுத்தம் எனப்படுகிறது.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்

**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

**அப்பர் பெருமான் திருக்கச்சி ஏகம்பம் எழுந்தருளல்**

சிந்தை இடையறா அன்பும் திருமேனிதனில் அசைவும் உடைய சைவ வேந்தராகிய அப்பர் பெருமான், திருவண்ணாமலையினை வணங்கிய பிறகு திருவோத்தூருக்குச் சென்று இறைவனைக் கும்பிட்டு, அதன் பிறகு இறைவன் வீற்றிருந்து அருள் செய்கின்ற பல திருக்கோயில்களை வணங்கிய பின் **“தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் திருக்கச்சி ஏகம்பன் செம்பொற் கோயிலை”** அடைந்தார். அதனை தெய்வச் சேக்கிழார் பெருமானின் திருவாக்கில் காண்போம்.

திருக்கச்சியை, **“வையம் முழுதும் தொழுது ஏத்தும் மதில்சூல் காஞ்சி, தையல் தழுவக் குழைந்தபிரான் தங்கும் தெய்வப்பதி”** என்றெல்லாம் குறிப்பிடுகிறார். தெய்வச் சேக்கிழார் பெருமான் **“தெய்வப்பதி”** என்று சொல்லும் பொழுதே அதன் மேன்மையை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. தெய்வத்தன்மை வாய்ந்த தலம் என்பது அதன் பொருளாகும். தெய்வத்தன்மை பெற்றிருக்கக் கூடிய ஒரு இடம் அன்றிலிருந்து இன்று வரை மக்களுக்கு நற்பயன்களை தந்து கொண்டே இருக்கும். மக்களை மல நீக்கம் செய்து தேவு செய்தல் தெய்வத்தன்மையாகும். அதனை இறைவன் பல்வேறு தலங்களிலிருந்து செய்து கொண்டிருக்கிறான். அப்பேற்பட்ட காஞ்சிபுரத்திற்கு அப்பர் பெருமான் எழுந்தருள்கிறார். **“தொண்டை நாடு சான்றோர் உடைத்து”** என்பது ஆன்றோர் வாக்கு. அதிலும் தொண்டை நாட்டின் தலைநகராக விளங்கக்கூடிய காஞ்சியிலே எப்பொழுதும் விழாக்கோலம் இருக்கும். சான்றோர்கள் நூல்களை ஆராய்ந்து கொண்டிருப்பார்கள். நல்ல மேன்மக்கள் நல்ல கருத்துக்களை அறிவித்துக் கொண்டிருப்பார்கள். இப்பேற்பட்ட இடத்தில் இறைவனுடைய திருக்கோயில் அமைந்து அந்நகருக்கு மென்மேலும் சிறப்பை கூட்டுகிறது. அதிலும் எம்பிராட்டி இவ்வுலகு ஏழையும் ஈன்றவளாகிய அம்மை அருந்தவம் செய்து அறம்வளர்க்கின்ற அற்புதப் பதியும் இதுவேயாகும். பெருமான் கள்ளக் கம்பனாக, நல்லக் கம்பனாக காட்சி தந்து அருள் செய்கின்ற திருத்தலம்.

அடியார்களைப் போற்றுவது என்பது ஆண்டவனை அணுகுவதற்கான எளிமையான வழியாகும். அப்படியாக அன்பே வடிவாய்த் திகழும் அப்பர் பெருமான் திருக்கச்சிக்கு எழுந்தருளும் பொழுதில் காஞ்சியில் இருக்கக்கூடிய அடியவர்கள் உளம் மகிழ்ந்து உணர்வு பொங்கி நாயனாரை வரவேற்பதற்காகத் தயாரானார்கள். இந்த உலகம் உய்வதற்காக அருள் செய்கின்ற எம்பெருமான் பேரருளினால் சூலை தந்து ஆண்டு கொண்ட நம்முடைய நாயனார் இங்கே வருகிறார். நாம் உய்வதற்காக இங்கே வருகிறார் என்று அங்குள்ள யாவரும் முகம் மலர்ந்து வரவேற்றனராம். அதனை தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் பொழுது, காலையிலே சூரியன் உதித்தவுடன் எப்படி தாமரை மலர்கள் இதழ்களை விரித்து இன் முகம் காட்டுமோ, அதேபோன்று அப்பர் பெருமான் வருவதை எண்ணி அகமும் முகமும் மலர அவர்கள் இருந்தார்களாம். அதாவது அப்பர் பெருமான் ஞாயிறாகவும் அடியவர்கள் தாமரையாகவும் இருப்பது போன்று நமக்கு இந்தப் பாடல் அறிவுறுத்துகின்றது. இதன் மூலம் நமக்கு கிடைக்கின்ற செய்தி, நாம் ஒருவரை வரவேற்கும் பொழுது எந்த மாதிரியான ஒரு மனநிலையில் இருக்க வேண்டும். நம்முடைய அகமும் புறமும் எத்தன்மையில் அமைய வேண்டும் என்பதை பெரியபுராணம் வழியில் நின்று நமக்கு பெரியவர்கள் காட்டியிருக்கிறார்கள்.



தெய்வச்சேக்கிழார் பெருமானின் திருப்பாடல்,

**“ஞாலம் உய்ய திருவதிகை நம்பர் தம் பேரருளினால்
சூலை மடுத்து முன்னாண்ட தொண்டர் வரப்பெற்றோம்” என்று
காலை மலரும் கமலம்போல் காஞ்சி வாணர் முகமெல்லாம்
சால மலர்ந்து களிசிறப்பத் தழைத்த மனங்கள் தாங்குவார்.** *318*

அடுத்ததாக அடியார் பெருமக்கள் எவ்வாறு நாயனாரை எதிர்கொண்டார்கள் என்பதை மிகச் சிறப்பாக தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். எப்பொழுதுமே சிவனடியார்கள் திருவேடப் பொலிவுடன் திகழ்வார்கள். நெற்றியிலே திருநீறு, மார்பிலே கண்டிகை, சிந்தையில் சிவம், நாவிலே திருப்பாட்டு என இருப்பார்கள். இருப்பினும் நாவரசப் பெருமான் வருகிறார் என்பதற்காக இன்னும் சிறப்பாக திருவேடப் பொலிவுடன் சென்றார்களாம். எவ்வாறு இறைவனை வரவேற்கும் பொழுதும் அல்லது இன்னும் உயர்ந்த நிலையில் இருப்பவர்களை வரவேற்கும் பொழுது பல்வேறு சின்னங்களை முன்பாக எடுத்துச் செல்வது வழக்கமோ அந்த வகையில் அப்பர் பெருமானை வரவேற்பதற்காக, வெண்சாமரம் முதலிய பொருள்களை கொண்டு சென்றார்களாம். அதிலும் குறிப்பாக திரு அலகினை எடுத்துச் சென்றார்களாம். அதுவும் அது சாதாரண அலகு அல்ல. தேவர்களாலும் அறிவதற்கு அரியதாகிய திரு அலகை ஏந்தி முன் சென்றார்களாம். இந்த இடத்தில் அலகை குறிப்பிடும் பொழுது, அது ஒரு குப்பைகளை தூய்மைப்படுத்துகின்ற ஒரு பொருள் தானே அதற்கு இவ்வளவு பெரிய சிறப்பை ஏன் தந்தார்கள் என்ற சிந்தனை உலகவற்கு வரலாம்? அவர்கள் அப்பர் பெருமானை வரவேற்றது திரு ஏகம்பன் திருவிழாவில் எழுந்தருளும் திருவீதியிலாகும். அந்த திருவீதியை தூய்மைப் படுத்துகின்ற அலகு இதுவாகும்.

ஆலயங்கள் தோறும் சென்று உழவாரப்பணி செய்து நாவில் தேவாரம் பாடி தொண்டு செய்து கொண்டிருந்தவர் அப்பர் பிரான். அப்பேற்பட்ட உழவாரப்பணி செய்யும் பொழுது உதவியாக இருப்பது அலகு. எனவே அது **“திரு அலகா”**யிற்று. தேவர்களாலும் அறிய முடியாத அரிய திரு அலகு என்று இதனை குறிப்பிடுவதற்கு காரணம்? அமரர்கள் பிறவிப் பிணி நீங்கி முத்தி அடைவதற்கு முயலும் தன்மையற்றவர்கள். சுகபோகங்களிலே இருப்பதற்கு விருப்பமுடையவர்கள். அவர்களுக்கு முத்தி அடைவதற்கான வழிகளை தேடுகின்ற எண்ணம் இல்லை. ஆனால் இந்த திரு அலகு நம்மை முத்தி அடையச் செய்யும். எப்படி? ஒரு சாதாரண திரு அலகு நம்மை முத்தி அடைய செய்யும் என்ற கேள்வி வரலாம். ஆம்! திருக்கோவிலிலே நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு தொண்டும் நமக்கு சிவபுண்ணியத்தை ஈட்டித் தரும். அப்படியாக திருக்கோயிலில் உழவாரம் செய்வதற்குப் பயன்படும் இந்த திரு அலகு நாம் முத்தி பெறுவதற்குரிய ஒரு வாய்ப்பை நமக்கு ஏற்படுத்தி தருவதாகும். எனவே திரு அலகு நாயனாரை வரவேற்கும் சின்னங்களில் ஒன்றாக இதுவும் இடம் பெற்றது. இந்த செய்திகளைக் குறிப்பிடும் பெரியபுராண பாடல்,

**தொண்டர் ஈண்டி எதிர்கொள்ள எழுந்து சொல்லுக்கு அரசர் பால்
கொண்ட வேடப் பொலிவினொடும் குலவும் வீதி பணி செய்யும்
அண்டர் அறிதற்கு அரிய திரு அலகு முதலாம் அவை ஏந்தி
இண்டை புனைந்த சடை முடியார் அன்பர் தம்மை எதிர் கொண்டார்.** *320*

தம்மை வரவேற்ற சீரடியர்களை தாமும் வணங்கி மகிழ்ந்து, திருக்கோயில் வாயிலை அடைந்து திரு ஏகம்ப நாதனைக் கண்டு வணங்கிய போது அப்பர் பெருமான் நின்ற தன்மையை தெய்வச் சேக்கிழார் பெருமான் மிகச் சிறப்பாக நமக்குக் காட்டுகிறார்.

அப்பாடல்,

**வார்ந்து சொரியும் கண் அருவி மயிர்க்கால் தோறும் வரும் புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பு அலைப்ப அன்பு கரைந்து என்பு உள் அலைப்ப
சேர்ந்த நயனப் பயன் பெற்றுத் திளைப்பத் திருவேகம்பர் தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து நீடும் பதிகம் பாடுவார்.** *323*

“மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கு என் கைதான் தலைவைத்து கண்ணீர்த் ததும்பி வெதும்பி உள்ளம் பொய் தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி” என்று மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் குறிப்பிடுவார். அதே நிலையில் தான் அப்பர் பெருமான் நிற்கின்றார். அவருடைய இரு கண்களிலிருந்து உருகிப் பெருகிய கண்ணீர் இறைவனுடைய திருமுடியிலிருந்து திருவடி வரை நீராட்டிச் சென்றது என்று சொல்லலாம். அடுத்ததாக மயிர்க் கால்கள் தோறும் புளகம் ஏற்பட்டு நின்றது. அவருடைய திருமேனியின் புறத்திலும் அந்த அன்பு வெளிப்பட்டு நின்றது. அதேபோன்று அவருடைய மனத்தில் ஏற்பட்ட அந்த காதல் கசிவு எலும்பையும் உருக்கி நின்றதாக தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். அந்த நிலையில் அவர் பதிகம் பாடுகிறார். இறைவனை காண்கின்ற நம்முடைய உள்ளம் எப்படி ஆக வேண்டும் என்ற உண்மையை இப்பாடல் நமக்கு காட்டுகிறது. உடனே இந்த பாடலில் இருப்பது போன்று நமக்கு கோயிலுக்கு சென்றவுடன் ஏற்படுமா ? என்ற கேள்விகள் எழலாம். நிச்சயமாக ஆகும், அதற்கு நாம் செய்ய வேண்டியது அப்பர் பெருமானைப் போல் இறைவன் மீது அன்பு வைக்க வேண்டும். தொண்டு செய்ய வேண்டும். இது நடந்தால் அதுவும் கட்டாயமாக நடக்கும். அப்பேற்பட்ட ஒரு நிலையை இறைவன் நமக்கு அருள வேண்டும் என சிந்திப்போம்.

**கரவாடும் வன் நெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடை தாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே.**

*4.7.1*

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (310 - 320)**

**சிவத்திரு. பா.சிவமாதவன், புதுக்கோட்டை.**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு நல்ல நாயகி உடனுறை பாசுபதேசுவரர் திருக்கோயில் – திருவேட்களம்

### தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 2ஆவது திருக்கோயில் – திருவேட்களம்



"சந்தம் மிலங்கு நகுதலை கங்கை தண்மதியம் அயலே ததும்ப வெந்த வெண்ணீறு மெய் பூசும் வேட்கள நன்னகராரே."

உலகங்களைப் படைப்பவரும், இறுதி செய்பவரு மாகிய, தலைமைத் தன்மையுடைய சிவபிரான் வெந்த வெண்ணீறு மெய்யில் பூசியவராய் அர்ச்சுனனுக்கருளிய அற்புதத்தலமே நல்ல நாயகி உடனுறை பாசுபதேசுவரர் உறையும் பதியே திருவேட்களம் திருத்தலம்.

**அமைவிடம்: கடலூர் மாவட்டம், தமிழ்நாடு**
சிதம்பரத்திலிருந்து அண்ணாமலை நகர் செல்லும் சாலையில் உள்ளது. (அண்ணாமலை பல்கலைகழகப் பகுதியை கடந்து சென்றால் எளிது)

**இறைவர் திருப்பெயர்: பாசுபதேசுவரர், பாசுபதநாதர்.**
**இறைவியார் திருப்பெயர்: சற்குணாம்பாள், நல்லநாயகி.**
**கோயில் மரம்: மூங்கில் மரம்.**
**தீர்த்தம்: தீர்த்தக்குளம் : கோயிலின் எதிரில் உள்ளது. (நள தீர்த்தம்)**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சேக்கிழார், நாரதர், அர்ச்சுனன் முதலியோர்.**
**பாமாலை: திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அருணகிரி நாதர்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல் ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்த முழவம் இயம்ப மலைமகள் காணநின் றாடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதி யம்மய லேததும்ப
வெந்தவெண் ணீறுமெய் பூசும் வேட்கள நன்னகராரே. *(1 - 39)*

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க இருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. *(5 - 42)*

### திருத்தலச் சிறப்பு

தில்லைக்கூத்தனை வழிபட்டபின் ஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்து பெருமானை வணங்கினார். பின்னர் இங்கேயே சிலநாள்கள் தங்கியிருந்தார். அப்பர் பெருமான் தில்லையை வணங்கிப் பின்பு வந்து இத்திருக்கோயிலைப் பணிந்து, திருக்கழிப் பாலையையும் தொழுது மீண்டும் தில்லை சென்றடைந்தார்.

அர்ச்சுனனுக்கு பாசுபதம் தந்தருளிய தலம் என்பது தொன்நம்பிக்கை (ஐதீகம்). பாசுபதம் ஏந்திய மூர்த்தியும், அருச்சுனன் திருமேனியும் வரலாற்றுத் தொடர்புடையவை இவை இரண்டும் மிகப் பழங்காலத்தில் குளத்திலிருந்து கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. முன்மண்டபத் தூண்களில் அரிய சிற்பங்கள் கண்களுக்கு விருந்தாக உள்ளன. சந்நிதி வாயிலின் இருபுறமும் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. நடராசர் முருகனாகவும் முருகன் நடராசராகவும் தோன்றிய தலமாகக் கூறுவார்கள்.

திருவேட்களம் பற்றி சம்பந்தர் பாடும் போது, **"வேட்கள நன்னகர்"** என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன், **"சிறப்புடன் வாழ வாழ்வில் ஒரு முறையாவது திருவேட்களம் போ,"** என்றும், அம்பிகையை 'பெண்ணில் நல்லாள்' என்றும் குறிப்பிடுகிறார். அருணகிரிநாதர் இத்தல முருகனை திருப்புகழில் பாடியுள்ளார்.

### திருத்தல வரலாறு

அர்ச்சுனன் தவம் செய்து, பாசுபதம் பெற்ற முதன்மைத் தலமாகக் கருதப்படுவது திருவேட்களம். பாரதப்போரில் வெற்றி பெறுவதற்காக அர்ச்சுனன் பாசுபதம் பெற விரும்பி சிவபெருமானை நோக்கி மூங்கில் காடாக இருந்த திருவேட்களத்தில் கடும் தவம் செய்கிறான். அர்ச்சுனனின் தவத்தைக் கெடுக்க துரியோதனன் மூகாசுரனை பன்றி வடிவில் அனுப்பினான். சிவபெருமான் பார்வதியுடன் வேடன் உருவில் வந்து தனது அம்பால் பன்றியை கொன்றார். அதே பன்றியின் மீது அர்ச்சுனனும் அம்பெய்தினான். அந்த பன்றியை யார் கொன் றார்கள் என்பது குறித்து சிவனுக்கும் அர்ச்சுன னுக்கும் சொற்போரும், விற்போரும் நடந்தது. விற்போரில் அர்ச்சுனனின் வில் முறிந்தது. இதனால் கோபமடைந்த அவன் முறிந்த வில்லால் வேடனை அடித்தான்.

இந்த அடி மூவுலகத்தில் உள்ள அனைத்து உயிர்களின் மீதும் விழுந்தது. இதனால் அன்னை பார்வதி கோபமடைந்தாள். சிவன் பார்வதியை சமாதானப்படுத்தி தனது திருவடியால் அர்ச்சுனனை தூக்கி எறிகிறார். அவன் சிவனின் திருவடி தீட்சை பெற்று, அன்னையின் கருணையால் இத்தல



தீர்த்தத்தில் விழுகிறான். சிவன், உமாதேவியுடன் காட்சிகொடுத்து, அர்ச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்து அருளினார். அர்ச்சுனன் வில்லால் அடித்த தழும்பு இலிங்கத்தின் மீது இருப்பதை இன்றும் காணலாம்.

### திருக்கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கிய திருக்கோயில். கோயிலின் எதிரில் நாகலிங்க மரமும் குளமும் உள்ளன. நன்கு பராமரிக்கப்பட்டு வரும் இத்திருக்கோயில் 'நகரத்தார்க்கு' உரியது.

கோபுரம் தொழுது வாயிலைக்கடந்து உட் சென்றால் வீதியில் சித்திவிநாயகர், அம்மையப்ப முருகன் (சோமாஸ்கந்தர்) சந்நிதிகள் உள்ளன. நால்வர்களையடுத்துச் சொக்கநாதரும் மீனாட்சியும் காட்சிதர, அடுத்துச் சுப்பிரமணியர், திருமகள் சந்நிதிகள் உள்ளன. தலமரம் மூங்கில் உள்ளது.




பைரவர், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகங்கள்) சந்திரன் சூரியன் உள்ளனர்.

வலம் முடித்து முன் மண்டபத்தில் சென்றால் வலப்பால் அம்பாள் சந்நிதி, நின்ற கோலம். நேரே சுவாமி காட்சி தருகின்றார். சிவலிங்கத் திருமேனி அர்ச்சுனனுக்கருளிய பாசுபதேசுவரர், அழகான தோற்றம்.

சந்நிதி வாயிலின் முன்னால் இருபுறமும் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் காட்சி. நடராசர் மகுடமணிந்து காட்சி தருவது சிறப்புடையது. இடப்பால் நால்வர் எழுந்தருளல் திருமேனிகளும் தொடர்ந்து எழுந்தருளல் திருமுன்களும் வைக்கப் பட்டுள்ளன. இத்திருமுன்கள் பாசுபதம் ஏந்திய மூர்த்தியும், அருச்சுனன் திருமேனியும் தல வரலாற்றுத் தொடர்புடையவை. இவை இரண்டும் மிகப் பழங்காலத்தில் குளத்திலிருந்து கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்குத் தொடர்புடைய வகையில் முன் மண்டபத் தூண்களில் இறைவனும் இறைவியும் வேடுவ வடிவத்தில் நாய்களுடன் செல்வது அருச்சுனனுடன் போரிடுவது போன்ற சிற்பங்கள் உள்ளன. இன்னொரு தூணில் அர்ச்சுனன் தவம் செய்வது, கீழே (பன்றி) மூகாசூரன் வந்து அதற்கு இடையூறு செய்வது போன்ற சிற்பமும் உள்ளது. சுற்று மூர்த்திகளாக உச்சி விநாயகர், நாட்டியமாடும் பிள்ளையார் (நர்த்தன கணபதி), ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்தி), பெருசோதியன் (இலிங்கோற்பவர்), நான்முகன் ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

கோயிலில் பெருவிழா, வைகாசி விசாகத்தில் ஏகதின உற்சவமாக நடைபெறுகின்றது. அன்று பசுபாதம் அருளிய காட்சியும், பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் இடம் பெறுகின்றன.

ஒன்பானிரவு (நவராத்திரி), பெருஞ்சிவனிரவு (சிவராத்திரி), கார்த்திகைச் சோமவாரங்கள் முதலி யவை நடைபெறுகின்றன. நாடொறும் ஐந்து கால வழிபாடுகள், இக்கோயிலின் பக்கத்திலேயே திருக்கழிப்பாலையும், நெல்வாயிலும் (சிவபுரி) உள்ளன.

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 10ம் நூற்றாண்டளவில் சோழர்கள் ஆதிக்கம் செலுத்திய பதவியா சிவன் கோயில்கள்


பதவியா குளம் - பதவியா

ஈழத்தில் சோழரின் ஆதிக்கம் ஊடுருவிய காலத்தில், பொலநறுவை 'ஜனநாத மங்களம்' என்ற பெயர்ப் பொலிவோடு புகழ்பெற்றிருந்த நகரமாகத் திகழ்ந்தது. பொலநறுவைக் காலத்திற் சிறப்புற்று விளங்கிய பல நகரங்களுள் பதவியாவும் ஒன்றாகும். இவ்விடம் வட மாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்கு மகாணம் ஆகியவற்றின் எல்லையின் மத்தியிலே அமைந்துள்ளது. இங்கு பழைய நீர்ப்பாசனக் குளம் ஒன்று அமைந்துள்ளது. இது தனவாபி, பதிவாவி என்று அழைக்கப்படுகிறது. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் "பன்டொன்னாறு குளம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரதேசம் பூமி செம் மண்ணாகவும், வயல்கள், விவசாய அபிவிருத்திகள், சனப்பெருக்கம், வாணிபம் என வியாபார மத்திய நிலையமாக உருவெடுத்திருந்தது.

இன்று பதவியா என்று அறியப்படும் இவ்விடம் 12 ஆம் நூற்றாண்டுச் சாசனமொன்றில் "சிறீ பதி கிராமம்" (பதி நகரம்) என்றும் ஐந்நூற்றுவரின் அதிகாரத்தைப் பெற்றிருந்த வணிக நகரம் என்றபடியால் "ஜயம் பொழில் பட்டனம்" என்ற பெயராலும் குறிப்பிடப்பட்டிருந்தது. சோழர்களின் ஆதிக்கம் இந் நகரத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில் நானா தேசிவணிகர் தங்கியிருந்து. சிவன் கோயிலை உருவாக்கி அதற்குத் தானங்கள் வழங்குவதிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர் மற்றும், வீரக்கொடி என்னும் படைப்பிரிவினரும் கோயிலொன்றை உருவாக்கி வழிபாடு ஆற்றுவதற்கு விக்கிரகமும் செய்து கொடுத்தனர் என்று அவர்களைப் பற்றிய சாசனம் தெரிவிக்கின்றது.

இன்னும் பல வணிக கணங்களின் மெய்க்கீர்த்திகளில் தளிநங்கைமார் (தளி பெண்டுகள்) என்னும் தேவரடியாள்கள் ஆடல்பாடல் கோயில்களில் உபசாரம் செய்வதற்கு இருந்தனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி பதவியாவில் கிடைத்துள்ள வெண்கல முத்திரை வரலாற்றுச் சிறப்பும் முக்கியத்துவமும் கொண்டது. முத்திரையில் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் நந்தியின் உருவமும், அதன் இரு மருங்கிலும் உள்ள குத்துவிளக்குகளும், சைவசமயத்தின் பிரதிபலிப்பாகும். நந்தி சைவர்களின் புனிதம் வாய்ந்த சின்னமாகவும், சிவபெருமானைக் குறிக்கும் சின்னமாகவும் அமைகின்றது. அம் முத்திரையில் மேல்வரும் வாசகம் அமைந்துள்ளது.

**"ஸ்ஷஸ்தி ஶ்ரீமத் த்விஜா வாஸ**
**ஶ்ரீபதி க்ராமவாஸினா மகேஸஸ்ய**
**ததிஞ்திராதி மௌலி, ராஜித சாஸனம்"**

(மங்களம்! இருபிறப்பாளர் வாழும் அருள்மிகு பதியில் வீற்றிருப்பவரும், இந்திரன் முதலிய (தேவர்களின்) முடிகளால் அழுத்தப்படும் திருப்பாதங்களையுடையவராயுமுள்ள மகேசனின் சாசனம்).

இச் சாசனம் மகேசன் எனும் சிவனின் கோயிலில் காணப்பட்டதாகக் கொள்ளலாம். இம்முத்திரை அந்தணர் வாழும் பகுதியொன்றில் இருந்த சிவன் கோயில் முத்திரை என்றும் அறியப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட தொல் பொருட் சின்ன ஆதாரங்களைக் கொண்டு ஆராயும் போது ஒரு சைவசமயப்பண்பாட்டுடன் பதவியா நகரம் சிறப்புப் பெற்றிருந்த பூமி என்பது எமக்குப் புலனாகும்.

### சிவன் திருக்கோயில்கள்

சோழராட்சிக்காலத்தில் சிறீபதிகிராமம் (பதி நகரம்) என்று சிறப்பிக்கப்பட்ட நகரத்தில் ஐந்துக்கு மேற்பட்ட சிவாலயங்களின் எச்சங்களும், கோயில் வழிபாட்டுடன் தொடர்புடைய சின்னங்களும், சிவாலயத்திற்குரியதான தமிழ்க் கல்வெட்டுக்களும் அகழ்வாராய்ச்சியின் பலனாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு கிடைத்துள்ள வெண்கலச்சிலைகளும், கற்சிலைகளும் 11 ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகள் ஆகும். பொலநறுவையை அடுத்து அதிகளவான தொல் பொருட் சின்னங்கள் கிடைத்திருப்பது பதவியாவில் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

1891, 1961 ஆகிய இரு ஆண்டுகளில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் விளைவாக ஐந்து சிவன் கோயில்கள் அடையாளம் கண்டுள்ளனர். இவை அனைத்தும் அடர்ந்த காட்டினுள் மறைந்து கிடந்தவைகள் ஆகும். அவற்றை அடையாளம் காண்பதற்காக முதலாம், இரண்டாம், முன்றாம் சிவாலயம் என்று பெயரிடப்பட்டுள்ளன.

### முதலாம் சிவாலயம் - இரவிகுலமாணிக்க ஈச்சரம்

பதவியாவில் உள்ள சிவாவயங்களுள் பிரதானமானது முதலாம் சிவாலயமாகும். இது இராசராசனின் விருதுப் பெயரான இரவிகுலமாணிக்கம் என்ற பெயரைச் சூடி 'இரவிகுலமாணிக்க ஈச்சரம்' என்ற பெயரினைப் பெற்றிருந்தது. இக் கோயில் கி.பி 1005 ஆம் ஆண்டு, இராசராசன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாக அங்கு கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது.


பதவியா சிவாலயத்து வெண்கல முத்திரை - முன்புறத்தோற்றம்

அடர்ந்த வனப்பகுதியில் அழிவடைந்த நிலையிலேயே இவ் ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டது. 166 அடி நீளமும், 100 அடி அகலம் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ளது. கருவறை, அந்தராளம், மண்டம். கிழக்கு, மேற்கு பக்கமாக அமைந்த கோபுரவாசல் ஆகிய உறுப்புக்கள் தென்படுகின்றது. அடிப்பாகம் (அதிஷ்டானம்) கருங்கற் பாணியாகும், ஆலயத் தின் மேற்பாகம் சிதை வடைந்து விட்டது. சில தூண்கள் மட்டுமே எஞ்சி யுள்ளன. இக்கோயிலை யார் யார் அத்திவாரம் இட்டுக் கட்டினார்கள் என்று ஒரு சாசனம் தெரிவிக்கின்றது.

**"நாராயணன் சிற்றம்பலமுடையான் அதிகாரி இட்ட கல்லு ஸ்வஸ்தி ஶ்ரீ இக்கல்லு வருதன் திருமால் இட்டது. இக்கல்லு அழகன வந்தர் மாராஸ்வயன் இட்டது, ஸ்வஸ்தி ஶ்ரீ இக்கல்லு அழகன் வந்தமானான தேசியயாயத் துணைச் செட்டி இட்டது ஸ்வஸ்தி ஶ்ரீ இக் கல்லு புதியில் வணிகன் தனி அப்பன் இட்டது"**

எனக் குறிப்பிட்டதன் படி நாராயணன் எனும் அதிகாரி, திருமால், அழகன், துணைச் செட்டி, அப்பன் முதலானோர் சேர்ந்தே இவ் ஆலய அடிப்பாகத்தை அமைத்தனர் என்பது தெரிவிக்கப்படுகின்றது.


சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இக் கோயிலுக்கு நானாதேசிகர் எனும் வணிகர், கொண்ணாவில் வெண்காடன், பளைப்பாக்கம் உடையார் உட்பட பத்துக்கு மேற்பட்ட சோழப்பிரதானிகள் ஏழு நந்தா விளக்குகளும், ஐந்து சந்தி விளக்குகளும், இரண்டு எறிமணிகளும், பொற்காசுகளும் கால் நடைகளும் மானியங்களாகக் கொடுத்தனர் என்று சாசனங்கள் மூலமாகத் தெரிய வருகின்றது.

இவ் ஆலயத்தின் அகழ்வின் போது, ஒரு காலை தரையில் ஊன்றி, மற்றொரு காலை மடக்கி தவமிருப்பது போல நிற்கும் கோலத்தில் (ஸ்தானக நிலையில்) உள்ள உமாதேவியாரின் வெண்கலப் படிமம் ஒன்றும், தெய்வ உருவம் செதுக்கப்பட்ட செங்கல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### இரண்டாம் சிவாலயம் - பத்திருப்பு சிவன் கோயில்

பதவியாவில் 1891 ஆம் ஆண்டு, குளம் அமைந்துள்ள வடகிழக்கில் மொறகொட அழிபாடுகளைச் சுற்றியுள்ள காடுகளை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட போது இக் கோயில் கண்டுபிடிக்கப்பட்டது. இது சிவன் கோயில் என்பதற்கு அடையாளமாக கருவறையைச் சுற்றியுள்ள பகுதிகளை துப்பரவு செய்யும் போது செப்பமான இலிங்கமும் ஆவுடையாரும் காணப்பட்டது. கல்லில் அமைந்த நந்தியும் காணப்பட்டுள்ளது. சிதைவடைந்த தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட சாசனத் தொடர்களும் காணப்படுகிறது.

### மூன்றாம் சிவாலயம் - வலகழி உத்தமனார் கோயில்

பதவியாவில் 16 வரிகளில் தமிழில் எழுதப்பட்ட கற்தூண் சாசனம் மூன்றாம் சிவாலயம் பற்றிய குறிப்பைத் தருகின்றது. அச்சாசனத்தின் தெளிவான சொற்தொடர் வாசகம் மேல்வருமாறு உள்ளது.

**"உத்தமர்தங் கோயில் வலகழி எனலும்**
**சீரிளமை சேர்ந்த பதியில், நித்த நியமம்**
**நெறிவளர் சித்தமுடன், விசையராமப்**
**பேரிளமையார் தங்கள் பேர் நாவாயிரங்**
**கொண்டுரைப்பின் திக்கந்தமாக முயன்றான்**
**முயன்ற திரு"**

இதன்படி, உத்தமர் என்று போற்றப்படும் சிவபெருமானுடைய கோயில் வலகழி எனும் பெயரால் சுட்டப்பட்டுள்ளது. மற்றும் பதி எனும் தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. தினமும் இக்கோயிலுக்குத் தானம் வழங்கிய விசையராமப் பேரிளமையாரைத் திருத்தலத்திலே புகழ்ந்து போற்றுவதன் பயனாக வணிகரின் முயற்சி சித்திக்கும் என்று குறிப்பிட்டுள்ளதன் படி, இது ஓர் சிவாலயத்தின் அமைப்பு தொடர்பான பிரகடனம் என்று கருதலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இங்கு பேரிளமையார் என்பவர்கள் சோழராட்சிக் காலத்தில் இங்கு வந்து குடியேறியவர்களாக இருக்கலாம்.

பொலநறுவைக் காலத்திற் பதிநகரமாக சிறப்புப் பெற்றிருந்த பதவியா சைவசமயம், அதன்வழிபாடுகள் செல்வாக்குப் பெற்ற நகரமாகவும், வணிகரின் செல்வாக்கு மிகுந்த நகரமாகவும் மிளிர்ந்துள்ளது. இங்கு அகழ்வாராய்ச்சியின் விளைவாகக் கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்கள் வாயிலாக ஐந்து சிவாலயங்கள் இனங்காணப்பட்டாலும் ஆதாரங்கள் மூலமாக நிரூபிக்கக் கூடிய இரவிகுல மாணிக்க ஈச்சரம், பத்திருப்பு சிவன் கோயில், வலகழி சிவன் கோயில் ஆகிய சிவாலயங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

திருச்சிற்றம்பலம்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Tamil Society (T-Soc) Inaugurated at Baulkham Hills High School

Last year at Baulkham Hills High School in Sydney we initiated a T-Soc or Tamil Society club to bring together Tamil students and anyone interested in teaching and preserving the Tamil culture and language. Through the fortnightly meetings, we leaders get to teach younger students about Tamil culture and heritage through various activities. The club became very popular and gained much support with around 100 people attending the first meeting.

Our club, T-Soc, aims to foster cultural awareness and pride among Tamil-speaking students. By celebrating Tamil literature and history, T-Soc allows its members to connect more deeply with their roots and heritage. This sense of cultural identity promotes a positive outlook on their language and encourages them to embrace and cherish their cultural background. Through analysing Tamil literature and history, T-Soc will offer its members a platform to explore and appreciate the rich artistic and historical contributions of Tamil culture. This exploration can lead to increased knowledge and a deeper appreciation of Tamil heritage. Additionally, T-Soc will be a fun and engaging club that fosters a sense of friendship among its members, especially among the younger grades. By creating a welcoming and supportive environment, the club encourages social interactions, allowing students to build lasting friendships with others who share a common interest in the Tamil language and culture.

In addition to the weekly meetings, in November 2023, T-Soc held its first event named Falooda Festival. In this event, we made and sold Faloodas to the school at recess and lunch and raised around $1000 which we then donated to charity to help impoverished kids in schools in Jaffna. This event showcased that this club not only shared culture through fun ways but it also intended to make a difference in the community and use its power to help those that are less advantaged.

This year in 2024 T-Soc's first lesson of the year was dedicated to the Pongal festival where we taught students the importance and meaning behind this ancient Tamil celebration. We highlighted the importance of appreciating the flora, fauna and the sun which make life on this planet sustainable for civilisation. In addition to this informative lesson, we also handed out pongal and vadai to around 150 kids to give them a taste of cultural Tamil food to further share Tamil tradition with others.

Overall T-Soc is an important club that we should strive to maintain into the future. It enables us to showcase our language and culture to hundreds of students whilst also partaking in initiatives to help the community.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu". These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

There was once a merchant in the town of Mylapore known as Sivanesar, who was a disciple of Sampanthar. Sivanesar's daughter had been bitten by a snake and all his efforts to try and save her ended in failure. She died and Sivanesar came to the decision of saving her bones and ashes after her cremation.



Sivanesar had heard that Sambanthar was coming to Mylapore and met Sampanthar and his disciples. Sivanesar fell on the ground and welcomed Sampanthar, who enquired about his daughter. Sampanthar then went to Kapaleeswarar Temple. This temple is believed to have been built in the 7th Century by the Pallavas, who were ruling at the time. When Sampanthar came out of the temple he asked Sivanesar to bring the pot with the bones and ashes of his daughter to the front of the temple. He saw the pot and sang the hymn beginning with the words "Mattittaa punnai", which goes as follows:

**மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**

Mattitda punnaiyang kaanan madamayilaik
Kattittang kondaan kapaalees saramamarnthaan
Ottitta pannpi nuruththira palkanaththaark
Kattittal kaanaathe pothiyo poompaavaay.


In English this translates to, Sivan who dwells permanently in the beautiful Mayilappur which has a sea-shore garden of mast-wood trees which pour honey. Do you go without witnessing the food cooked and served to the groups of many Saivaite devotees who are united with Sivan.

When he had completed the hymn, Sivanesar's daughter Poompavai reappeared from the pot. Everyone praised Sampanthar for his miracle and Sivanesar and Poompavai fell at Sampanthar's feet with gratitude.

To be continued...

# Melbourne Thai Pongal Festival





Siva.Vidhujan Sivasuthan
Year 10
Melbourne, Victoria.

The Thai Pongal event held at the Nunawading Community Hub in Melbourne was a vibrant celebration of Tamil culture and tradition. The festivities drew a large crowd, making it the biggest and most memorable Thai Pongal event in Melbourne yet. As the event kicked off, families and friends gathered to participate in various activities, highlighting the richness of Tamil heritage.



One of the highlights of the event was the Killithadu competition, a traditional game that brought joy and excitement to the kids. Additionally, adults engaged in a thrilling Kabaddi competition, showcasing their strength and agility.

The heart of the celebration was the communal cooking of Pongal, a sweet dish made from freshly harvested rice, symbolizing prosperity and abundance. Everyone eagerly participated in the cooking process, fostering a sense of unity and togetherness. Once the Pongal was ready, it was shared among all attendees, reinforcing the spirit of sharing and generosity.



The event also featured an array of delicious food and refreshing drinks, satisfying the appetites of all attendees. For the younger participants, there were plenty of thrilling rides and entertainment options, ensuring a fun-filled day for everyone.

As the sun set on the festivities, it was clear that this year's Thai Pongal event was a resounding success. The joyous atmosphere and sense of community spirit left a lasting impression on all who attended. With each passing year, the Thai Pongal celebration in Melbourne promises to grow even bigger and better, continuing to unite people of diverse backgrounds in celebration of Tamil culture and tradition.



# Naguleswaram Temple - Keerimalai and the healing springs



Aran Sivasuthan
Grade 8
Sydney

Naguleswaram Temple, also known as the Thiru tatumbalaeswaram temple of Keerimalai, is situated in the district of Jaffna-Sri Lanka and is one of the most venerated ancient Saiva historical temples. Many people believe its adjacent water tank, the Keerimalai springs, to have cultural properties, such as a high mineral content.

Keerimalai spring is a natural spring located near the coastal belt of Palaly 50 feet above the average sea level. The bathing tank was constructed adjacent to the pool and only the walls separate this pool from the rest of the sea. The water inside this pool was recorded to not be hot and it is believed that these underwater resources are connected with the Nilavarai bottomless well which was situated around 10 km away from the actual pool. Saiva's believe that the Keerimalai spring has healing powers, as per the geological analysis the water was enriched with high mineral properties. According to Saiva legends sage Nagulaimuni, shrunk by age and austerity while meditating at a cave, his face was often likened to the mongooses which roamed the area at the time. By going to the sacred spring located next to Naguleswaram temple, he was cured of his mongoose face. In gratitude for this extraordinary healing power he constructed a small but significant shrine and worshipped the lingam there.

The Aadi Amavasai festival falls during the Tamil month of Aadi(mid July-mid August) and brings Saiva pilgrims to the town to carry out rituals for their forefathers and take a divine dip in the natural springs. These rituals are usually carried out by men. Keerimalai is particularly famous for this festival. The new moon or Amaavasai is a significant day, and according to Tamil astrologers, in the month of Aadi, the moon is in the ascendant in Kataka rasi, which is occupied by the Sun; this concurrence is reminiscent of Siva and Sakthi in Saivism. Hence, there is special significance of Aadi Amavaasai as a day when children remember their departed parents, notably their late fathers. It is customary for them to offer prayers to the departed souls with the help of a priest and attend a temple of Sivan. In Sri Lanka, Keerimalai Nagules waram temple continues as the foremost shrine for Aadi Amavasai.

In 1983, the temple was occupied by the Sri Lankan army and devotees and priests were unable to visit the premises without special permits. At 4:00 PM on 16 October 1990, the Sri Lankan air force dropped three bombs at Naguleswaram. The first fell on the front of the temple destroying two temple chariots and other buildings, the second bomb fell on the southern courtyard of the temple destroying the premises of the priests. Two days later, on 18 October at 2:30 PM, the Sri Lankan Air Force returned and bombed the temple during the Kedara Gowri fast when thousands of devotees were present, killing 180 Tamil civilians, including 5 infants. Temple buildings, its ancient gopuram, the library housing



palm leaf manuscripts and statues incurred substantial damage. The bombing was carried out despite the presence of temple identification flags at four corners of the temple, as instructed by the International committee of the red cross. No access to the area was granted to devotees until 1997, when the Chief Priest was allowed to visit with an Additional GA of the Sri Lankan government. The temple was found to be ruins with the sacred Icons, vandalised or missing.

However, after 15 years had passed on Monday 6 February 2012, a major reconstruction of the temple was completed under the authority of the chief priest, Siva Sri Naguleswara Kurukkal, and Nagules waram's Mahakumbhabhishe kam took place. It was a monumental event with thousands of devotees who came to pray and receive blessings. This is the story of Naguleswaram temple, its life, destruction, stories, and rebirth.

# Sívapuranam



Thiruchitrampalam

Thollai irum piravi soolum thalai neekki
allal aruththu aanantham aakiyathē ellai
maruvaa neri yalikkum vaathavoor enkōn
Thiruvaasakam ennum thēn

Namasivaayavaalgha naathan thaalvaalgha
imaippoluthum en nenchil neenkaathaan thaalvaalgha
kōkalli aanda kurumanithan thaalvaalgha
aakamam aaki nindru annippaan thaalvaalgha
ēkan anēkan iraivan adi vaalgha

vēkam keduththu aanda vēnthan adi velka
pirapparukkum pinjnakandran peikallalkal velka
puraththarkuch seyōn than poonkallakal velka
karanguvivaar ul makillung kōn kalallkal velka
siranguvivaar ōnguvikkum seerōn kallal velka

Eesan adi pōttri enthai adi pōttri
thēsan adi pōttri Sivan sēvadi pōttri
nēyaththē nindra nimalan adi pōttri
maayap pirapparukkum mannan adi pōttri
seeraar perunthurai nam thēvan adi pōttri

aaraatha inpam arulum malai pōttri
Sivan avan en sinthaiyul nintra athanaal
avan arulaalē avan thaal vanangi
sinthai makillach Sivapuraanam thannai
munthai vinai muluthum ōya uraippan yaan

kannuthalaan than karunai kan kaadda vantheithi
ennuthatku eddaa ellilaar kallal iranchi
vinnirainthu mannirainthu mikkaai vilankoliyaai
ennirainthu ellai ilaathaanē nin peruncheer
pollaa vinaiyēn pukallumaaru ondru ariyēn

pulaakip poodai pulluvaai maramaaki
pal virukam aaki paravaiyaai paampaaki
kallaai manitharaai pēyaai kanankalaai
valasurar aaki munivaraai thēvaraai
sellaa nindra ith-thaavara sangamaththul

ellaap-pirappum piranthu illaithēn emperumaan
meiyē unn pon adikal kandu indru veedutrēn
uiyya enn ullaththil ōmgaaramaai nindra
meiyaa vimalaa vidaippaagaa vēthangal
"aiyaa!" ena ōngi aalnthu akandra nunniyanē

veiyaai thaniyaai iyamaanan aam vimalaa
poiyai yinavellaam pōyakala vantharuli
mei gnanam aaki milirkindra meichudarē
engnanam illaathēn inpap perumaanē
angnanam thannai akalvikkum nal arivē

aakkam alavu iruthi illaai anaithulakum
aakkuvaai kaappaai alippaai arul tharuvaai
pōkkuvaai ennai pukuvippaai nin thollumpil
naatraththin nēriyaai sēyaai naniaanē
maattram manam kaliya nindra marayōnē

karantha paal kannalodu nei kalanthaat-pōla
siranthadiyaar sinthanaiyul thēnoori nindru
pirantha pirapparukkum engal perumaan
nirangal ōrr ainthu udaiyaai vinnōrkal ēththa
marainthirunthaai emperumaan valvinai yēn thannai

maraínthida moodiya maaya irulai
aram paavam ennum arung-kayitraal kaddi
puranthōl pōrthu engum pullu allukku moodi
malam chōrum onpathu vaayit-kudilai
malankap pulan ainthum vanchanaiyai seiya

vilanku manaththaal vimalaa unakku
kalantha anpaakik kasinthu ul urukum
nalanthaan ilaatha siriyētku nalki
nilanthan mēl vantharuli neel kallalkal kaaddi
naayit-kadaiyaaik kidantha adiyētkuth

thaayit-sirantha thayaavaana thaththuvanē
maasatra sōthi malarntha malarchudarē
thēsanē thēnaar amuthē sivapuranē
paasamaam pattraruthup paarikkum aariyanē
nēsa arul purinthu nenchil vanchang-kedap

pēraathu nindra perung-karunaip-pēraarē
aaraa amuthē alavilaap pemmaanē
ōraathaar ul-laththul olikkum oliyaanē
neeraai urukki en aaruyiraai nindraanē
inpamum thunpamum illaanē ullaanē

anparukku anpanē yaavaiyumaai allaiyumaam
sōthiyanē thun irulē thōnraap-perumaiyanē
aathianē antham naduvaaki allaanē
eerththu ennai aadkonda enthaip perumaanē
koorththa mengnanaththaal kondunarvaar tham-karuththhin

nōkkariya nōkkē nunukkariya nunnunarvē
pōkkum varavum punarvum illaap punniyanē
kaakkum em kaavalanē kaanpariya pēroliyē
aattrinpa vellamē aththaamikkaai nindra
thōtrach-sudar oliyaai sollaatha nunnunarvaai

maatramaam vaiyakaththin vevvērē vantharivaam
thētranē thētrath-thelivē en sinthanaiyul
ootraana unnaar amuthē udaiyaanē
vētru vikaara vidakkudampin udkidappa
aatrēn em aiyaa aranē O' endru endru

pōtrip pukallnthu irunthu poi keddu meiyaanaar
meeddinku vanthu vinaippiravi saaraamē
kallap pulakkurampai kaddallikka vallaanē
nal irulil naddam payinradum naathanē
thillaiyul kooththanē thenpaandi naaddaanē

allal piravi aruppaanē O' endru
sollatku-ariyaanai sollith thiruvadikeell
solliya paaddin porul unarnthu solluvaar
selvar sivapurathththin ullaar Sivan adikkeell
pallōrum ēthappanninthu

Thiruchitrampalam

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின்
சைவ மாணவர் சபை நடாத்தும்

## திருவாசக மனனப் போட்டிகள்

மனனம் செய்யவேண்டிய பதிகங்களும் பரிசில்களும்

### ஆரம்பப் பிரிவு

தரம் 3
**சிவபுராணம் 61 வரிகள்**
பணப் பரிசு 500.00

தரம் 4
**சிவபுராணம் - முழுவதும்**
பணப் பரிசு 750.00

தரம் 5
**சிவபுராணம் மற்றும் திருவெம்பாவை 10 பாடல்கள்**
பணப் பரிசு 750.00

### கீழ்ப் பிரிவு

தரம் 6,7,8
**சிவபுராணம், திருவெம்பாவை**
பணப் பரிசு 1000.00

### மத்திய பிரிவு

தரம் 9,10,11
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி**
பணப் பரிசு 3000.00

### மேற் பிரிவு

தரம் 12,13
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம்**
பணப் பரிசு 5000.00

தென்னாடு

உ

### சிறப்புப் பிரிவு

தரம் 3 – 13
**சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம், போற்றித்திருஅகவல், நீத்தல் விண்ணப்பம்**
பணப் பரிசு 10,000

தரம் 3 – 13
**திருவாசகம் முழுமையாக**
பணப் பரிசு 100,000

மனனம் செய்தவர்கள் ஓதி ஒப்புவிப்பதற்கான நேரத்தினை பாடசாலை ஊடாகவோ அல்லது தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினை நேரடியாகவோ தொடர்புகொள்ளலாம்.

அலைபேசி இலக்கம்: 070 770 1111-021 222 9722

இணையம்: www.thennadu.org/thiruvasagam

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
தென்னாடு வீதி, கொக்குவில் - யாழ்ப்பாணம்.

மார்கழித் திங்கள், முதலாம் பிறை
ஆதிரை நன்னாள் 2023.

தென்னாடு

# Does the Lord Almighty exist? Natural and The Created

**Last month Summary :**

Sivakan , a 7 year old kid, had his friends come over to his house to play. One of them was sad because the plant he grew had died, even though he had looked after it properly. This made Sivakan say 'Absolutely true. No doubt about it at all. Everything in this world, whether inert objects or living beings, go through these three states. They come into existence, are sustained for sometime and die ultimately. Who causes all these changes to happen?'

Next day my friends assembled at my house as usual. After playing for some time, we took a short break. One of them voluntarily came forward and said, "I have an answer for yesterday's question. The lablab creeper, kittens and the old lady were born, lived for sometime and disappeared. All these are natural phenomena."

"Hey, how did you find out?"

We observe in our surroundings that the plants, animals and human beings are being born, stay in this world for some time and die after some time. This is a natural phenomenon in this world. It happens by the permutation. combination of the five great elements (space, air, fire, water and earth). It is called physical modification. This process can be considered to be natural or being carried out by these five great elements themselves. There is no need for somebody else separately for these changes to happen. I remember having read in school that such changes we observe in nature are natural changes,' was his reply.

'Define nature (Iyarkai). What is it?'

'Being natural - remaining as is, without being subject to changes - may be called as nature.'

'Going by your own statement, the things and beings that were born must remain as they are. Then only it can be called natural. Once they are subject to changes, is it not right to call them 'created' as opposed to natural?'

He asked, 'Can we not say change is the changeless nature of them?'


Then I elaborated on this topic. 'The term 'natural' cannot be used if anything is subject to changes. Since the action of change takes place, there must be someone who effects these changes.


You may say that these changes are carried out by the five great elements. These five great elements are inert, and hence non-intelligent. Inert things, by themselves cannot do anything independently on their own. The five great elements are not capable of effecting these changes. Therefore an intelligent and independent being is essential for these changes to take place. With that thought everyone dispersed for that day.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that an intelligent and independent being is essential for all phenomena, including birth, sustaining life and death to take place.



# Saiva Cultural Activities in Perth





Maathulan Satheesaan
Year 8
Parth - Australia

In Perth, Western Australia, we follow our saiva culture in many ways. As part of our culture, we all go to the temple every Friday and on special festivals and occasions. Every Friday we all gather at the temple and go to religion class to learn, thevarams and stories. After finishing class, we all go to pull the chariot and then gather together to sing pancha puranam to the god. Every Friday, we are learning more and more about our religion.

In April, we have our annual temple festival for 20 days, with the first 10 days for Shivan temple and the second 10 days for Murugan Temple. These 20 days are very special for all of us, and we learn many things about our religion in these days. Firstly, a few days before the festival we all converge together at the temple and clean it up, preparing it for the upcoming special festival. Then, as the festival starts, we all head to the temple every day and sing thevarams to the god. On the day of the chariot, both the children and adults join together and pull the chariot. In addition, some children also do Kaavathi dance as the chariot is being pulled while some others join the adults in singing thevarams. Some people also do angapirathadshanam and lift kappura satti. Then, on the day of the theertha thiruvizha, all of the children join together and take off their shirts and lift one of the five gods being lifted to the pond, while the remaining four are lifted by the adults. This is a point of time which all of the children are looking forward to every year.

Additionally, every time we all head to the temple, all the boys wear vetti and a shirt while the girls wear a saree. Although, not only do we come to the temple on Fridays and festivals, but we also come on other special days such as Thai Pongal, Thai poosam, Tamil New Year, Navaratri, and Kanda Sakshthi. On the day of Thai Pongal, all of the families wake up early and make Pongal, as the sun rises, as a way of saying thank you to the sun. Then, at night-time, we all go to temple and make Pongal again, in front of the god. During Thai Poosam, every year the chariot is pulled, and everyone heads to the temple to worship lord Murugan. Additionally, on this day, many people do Kaavathi and fulfil there Nerthi Kadans. On the day of Tamil New Year, everyone take a shower with Maruthuneer, early in the morning and then wears new clothes and goes to the temple. On the nine days of Navaratri, everyone regularly goes to the temple, to worship lord Durga, Lakshmi and Saraswathi. Every day in Navartri, the temple organises cultural programs, for children to get an opportunity to perform their cultural arts. Finally, on the six days of Kanda Shaksthi, many adults begin to fast for the six days and every night at the temple, everyone gathers together and sings Kanda Saksthi Kavasam. All of these festivals and occasions have helped us learn about our religion and culture in many ways. This is how we follow our saiva culture in Perth.

# தென்னாட்டு நிகழ்வுகள்



குடையிற் சுவாமிகள் குருபூசை (16-02-2024)



தைத்திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (06-02-2024)



தைத்திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (25-01-2024)



செங்கோல் ஆதீனம் சுவாமிகள் தென்னாடு வருகை (24-01-2024)



பிறப்பு புனிறு நீக்கல் வழிபாடுகள் (27-01-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 11ம் நாள் அன்று (23-02-2024 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org